Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

# EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் இலங்கை மாசி 4 ரம்ழான் 9 (15-2-62) வியாழக்கிழமை இதழ் 5

# மகாராணிக்கு பிரதமர்

# அவசரத் தந்தி

## கவர்னர்-ஜெனரலை விசாரிக்க அனுமதி கோரிக்கை

பார்லிமெண்ட், இரவு மணி 2

கவர்னர் ஜெனரல் சர் ஆலிவர் குணத்திலக்காவை சதித்திட்ட சம்பந்தமாக விசாரிக்க அனுமதி அளிக்க வேண்டுமென்று பிரதமர் சிறிமா, பிரிட்டனிலுள்ள மகாராணிக்கு அவசரத் தந்தி அனுப்பி இருப்பதாக, இன்று பார்லிமெண்ட் சபையில் மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தெரிவித்தார். சபைக் கூட்டம் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.

"சதித் தகவல் கிடைத்த பின்பும்

# பொலிஸ் அதிபர் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்

## இடதுசாரித் தலைவர்களை கைது செய்ய உத்தரவிடப்பட்டது"

### பார்லிமெண்டில் டாக்டர் என். எம். கண்டனம்

கொழும்பு, புதன்

**சதித் திட்டம்பற்றித் தகவல் கிடைத்த பின்பும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சீட்டு ஆடிக்கொண்டிருந்ததாயும், உடனடியாக அவர் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்றும், இடதுசாரித் தலைவர்களைக் கைதுசெய்ய பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டிருந்ததென்றும் டாக்டர் என். எம். பெரேரா கூறினர்.**

எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சிலர்மீது தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்படவிருந்ததென்றும், உண்மையில் பத்தேகம எம். பி. திரு. நீல். டி அல்விஸ்மீது தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதென்றும் கெஸ்பாவ எம். பி. திரு. சோமவீர சந்திரசிறி மீது தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட விருப்பதாயும் டாக்டர் என் எம். பெரேரா பார்லிமெண்டில் இன்று தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

"திரு. சந்திரசிறி கண்டிப்பான ஒரு இடதுசாரித் தலைவரல்ல. கர்னல் டி. சேரம் அல்லது சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் வேறுயாரும் கெஸ்பாவா அங்கத்தினரின் நடவடிக்கையில் நேரடியாகச் சம்பந்தம் கொண்டவர்கள் என எவரும் நம்பமுடியுமா? சதித்திட்டத்தில் ராணுவத்தினர் பெரும்பான்மையினராய் இருந்துங்கூட சகல கைதுகளும் பொலிசினுல் செய்யப்படவிருந்தது என்ற உண்மையை வற்புறுத்தவிரும்புகிறேன். சதித்திட்டம் எப்படி உருவாயிற்றுஎன அறிய முயற்சிக்கும்போது இந்தச் சூழ்நிலை தெளிவாக்கப்பட வேணடும்.

மற்றோர் விஷயம் என்னவெனில் இரகசியமாகச் செய்யப்படவேண்டியதற்கு மாருகக் கைதுகள்பற்றிப் பகிரங்கமாக விவாதிக்கப்பட்டதும் கைது உத்தரவுகள் பகிரங்கமாக விடுக்கப்பட்டதுமாகும். சதியில்சம்பந்தப்பட்டவர்கள் அதுபற்றி மற்றவர்களிடம் தாராளமாகப் பேசமாட்டார்கள். ஆனுல் இங்கோ பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் அருகாமையில் டி. ஐ. ஜி. காரியாலயத்தில் கைதுபற்றி விவாதிக்கப்பட்டிருக்கிறது எதிர்க்கட்சித் தலைவர்களைக் கைது செய்யும் முயற்சிகளும், இதர ஏற்பாடுகளும், பகிரங்கமாக விவாதிக்கப்பட்டுள்ளன. எதையும் மறைத்துவைக்க முயற்சிசெய்யப்படவில்லை. ராணுவ உளவாளிகள் என்ன செய்கின்றனர்? பொலிஸ் சுப்ரீண்டன்ஸ்டான்லி சேனநாயக்காவிடமிருந்து சதித்திட்டம்பற்றி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு தகவல் கிடைத்த சமயத்தில் அவர் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். ஆனுல் அவர் ஸ்டான்லி சேனநாயக்காவை அனுப்பிவிட்டுச் சீட்டு விளையாடிக்கொண்டிருந்திருக்கிருர். ஏன் ஸி. ஐ. டி. தலைவரின் முன்னுல் சேனநாயக்காவை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் விசாரிக்கவில்லை? ஏனெனில் ஐ. ஜி. பி.க்கே சந்தேகமிருந்தது.

பாராளுமன்றக் காரியதரிசியின் அறிக்கைப்படி ஸி.ஐ. டி. தலைவருக்கு குறித்த தருணத்தில் பகல் 12மணிமுதலே சதிபற்றிய தகவல் தெரிந்துள்ளது. இத்தகவலை யார்கொடுத்தது என கொழும்பு பொலிஸ் சுப்ரீண்டனை உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் விசாரித்தாரா? பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்னசெய்தார்? உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டரையும், கொழும்பு பொலிஸ் சுப்ரீண்டனையும் அப்பால் அனுப்பிவிட்டு "பிரிட்ஜ்" (சீட்டு) விளையாட்டில் மாலை 7 மணி வரை தொடர்ந்து ஈடுபட்டார்.

ஒரு பொது வேலைநிறுத்தத்தின்போது இடதுசாரித் தலை

(8-ம் பக்கம் பார்க்க)

# "ராணுவத்துக்கு அரசாங்கம் சூட்டிய புகழ்மாலை

## சதித்திட்டத்துக்கு ஊக்குவித்திருக்கலாம்"

— திரு. ஜயவர்த்தன

கொழும்பு, புதன்

"வடக்கிலும் கிழக்கிலும் ராணுவம் சிவில் நிர்வாகத்தை நடத்தியதை அரசாங்கம் புகழ்ந்துரைத்த செயலே, நாட்டின் சில பகுதிகளை சிவில் அதிகாரிகளைவிடத் தாங்கள் திறமையாக நிர்வகிக்க முடியுமானுல் ஏன் சகல பகுதிகளையும் நிர்வகிக்க முடியாது என்ற எண்ணத்தை ராணுவத்தினருக்கு உண்டாக்கியிருக்கவேண்டும்" என திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பார்லிமெண்டில் கூறினர்.

மற்றோர் காரணம், சில குழுவினரை அரசாங்கம் அகற்றமுயன்றதாக நாட்டில்ஏற்பட்ட நெருக்கடியாய் இருக்கலாம்.

பாராளுமன்ற முறையை ஸ்தம்பிக்கச்செய்து சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்கச் சதித்திட்டம் வகுத்தவர்கள் எண்ணியிருக்கலாம். இதற்குப் பதில் சதிகாரர்களை விசாரணைக்குட்படுத்துவதிலேயே இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை அரசாங்க அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 29 பேரில் எதிர்காலப் பிரதம மந்திரி எவரையும் நான் காணவில்லை. பாராளுமன்ற முறையை ஸ்தம்பிக்கச்செய்ய ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகிறது என்பது முட்டாள்தனமானது. பொதுத் தேர்தலுக்கு இன்னும் சிலவருடங்கள இருக்கின்றன. தற்போதைய அரசாங்கம் மட்டுமே அதை ஜனநாயக ரீதியில் கொண்டு வரமுடியும்" என்றும் ஜே. ஆர். குறிப்பிட்டார்.

## வான்வெளி பயணம் ஒத்திவைப்பு

கேப் கனவரேல், பெப். 14

வானவெளிக்கு மனிதனை அனுப்பும் அமெரிக்க முயற்சி கால நிலை சீராய் இல்லாததின் காரணமாக மீண்டும் 8-வது தடவையாக ஒத்திவைக்கப்பட்டது.

## சுகாதார வகுப்புகள்

முள்ளியவளை, புதன்

வவனியாப் பகுதிச்சுகாதார போதனையாளர் திரு சி.பொன்னம்பலத்தினுல், முள்ளியவளை ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் மாதந்தோறும் சுகாதார வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

# "கடும்நடவடிக்கை எடுக்க அரசாங்கம் அஞ்ச வேண்டியதில்லை"

## பார்லிமெண்டில் திரு. பீட்டர் கெனமன் பேச்சு

கொழும்பு, புதன்

**"சதித்திட்டம் சம்பந்தமாக கடும் நடவடிக்கை எடுப்பதில் அரசாங்கம் பயந்துபின்வாங்க வேண்டியதில்லை. ஏனெனில் இந்த அரசாங்கத்துக்கு மக்களின் ஆதரவு இருக்கிறது. சட்டவிரோதமான சதித்திட்டத்தைஅனுமதிக்கக்கூடாது" என இன்று பார்லிமெண்டில்திரு. பீட்டர் கெனமன் எம். பீ. பேசும்போது குறிப்பிட்டார்.**

'பிற்போக்குச் சக்திகள் அரசாங்கத்துக்கு எதிராய்ச் செயலாற்றிவருகின்றன. இதுபுதிய விஷயமல்ல. இது நீண்டகாலமாக நடந்துவரும் ஒரு விஷயமாகும். சபையிலும் மந்திரிகளிடமும் இதுபற்றி நாங்கள்கூறியிருக்கின்றோம். இவ்விதச் செயல்களை நசுக்கி ஜனநாயகத்தைப்பாதுகாக்க அரசாங்கம் உறுதியானநடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என நம்புகிறோம்" என்றும் திரு. பீட்டர் கெனமன் கூறினர்.

## இங்கிலாந்து வெற்றி

ரடல்ல, புதன்

மலைநாட்டு கிரிக்கெட் கோஷ்டிக்கும் இங்கிலாந்து கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் 10 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது.

| | |
|---|---|
| **இங்கிலாந்து** | |
| முதல் இன்னிங்ஸ் | 290 |
| 2-வது இன்னிங்ஸ் (விக்கட் நஷ்டமின்றி) | 10 |
| **மலைநாடு** | |
| முதல் இன்னிங்ஸ் | 204 |
| 2வது இன்னிங்ஸ் | ; |

## கென்னடி நிராகரித்தார்

மாஸ்கோ, பெப். 14

ஆயுதப்பரிகரணம் பற்றி 18 தேச உச்சிமகாநாடு ஜெனிவாவில் நடைபெறவேண்டுமென்ற திரு. குருஷ்சேவின் யோசனையை ஜனுதிபதி கென்னடி நிராகரித்துவிட்டதாய் அறிவிக்கப்பட்டது.

# இராமநாதபுரம் மாவட்ட தேர்தல் கண்ணேட்டம்

## முஸ்லிம்கள் ஆதரவு?

இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தல் பிரசாரம் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் இந்த மாவட்டத்தில் போட்டிக்கு நிற்கிருர்கள். அருப்புக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய இரு பார்லிமெண்ட் தொகுதிகளில் திருவாடாணை, சிவகங்கை, காரைக்குடி, திருக்கோஷ்டியூர், ராமநாதபுரம்' பரமக்குடி, மானமதுரை, திருச்சுழி, முதுகுளத்தூர், அருப்புக் கோட்டை, சாத்தூர், சிவகாசி,ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் ஆகிய 14 சட்டசபைத் தொகுதிகள் அடங்கியுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 1013786 வாக்காளர்கள் இருக்கிருர்கள் சட்டசபைத் தொகுதிகளுக்கும் இம்மாதம், 17-ம், 19-ம், 20-ம், திகதிகளிலும் பார்லிமெண்ட் தொகுதிக்கான தேர்தல் இம்மாதம் 17-ம்,19 ம் திகதிகளிலும் நடைபெறவிருக்கின்றன.

### ஆளுங்கட்சிக்கு ஆதரவு

சென்ற தேர்தலில் காங்கிரஸ அலாதவர்கள் 45 வீதம் தெரிவு செய்யப்பட்டிருக்கிருர்கள். தேவர வகுப்பார் அதிகமுள்ள இங்கு திரு. பசும்பொன் முத்துராமலிங்கதேவருக்கு மிகுந்த செல்வாக்கு இருக்கிறது. சுதந்திரா கட்சிக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் தான் இந்த மாவட்டத்தில் பலப்பரீட்சை நடைபெறவிருக்கிறது. இரு கட்சியினரும் மும்முரமாகப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாடு பார்வார்ட்பிளாக் தலைவரான திரு. முத்துராமலிங்கத்தேவர் காங்கிரசுக்கு பலத்த எதிர்ப்பைக் காட்டிவருகிருர். திரு தேவரும் சுதந்திராக் கட்சிக்கும் இங்குநல்ல உடன்பாடு

## தமிழகமும் பொதுத்தேர்தலும்

தோன்றியிருக்கிறது. கடந்த காலத்தில் இப்பகுதிகளில் ஏற்பட்ட அபிவிருத்தி வேலைகளால் ஆளுங்கட்சிக்கு இம்முறை தேவர் சமூகம்உட்பட பலரதும் ஆதரவு கூடியிருக்கிறது.

### பார்லிமெண்ட் தொகுதியில் முத்துராமலிங்கத்தேவ

இருபார்லிமெண்ட் தொகுதிகளிலும் மொத்தம் 8 அபேட்சகர்கள் போட்டியிடுகிருர்கள். இராமநாதபுரம் தொகுதியில் ஐவரும் அருப்புக்கோட்டையிடல் மூவரும் போட்டிபோடுகிருர்கள். இராமநாதபுரம் தொகுதியில் காங்கிரஸ்' சுதந்திரா, கம்யூனிஸ்ட் கட்சிகளும் மற்றும் இரு சுயேச்சைகளும், அருப்புக் கோட்டையில் காங்கிரஸ், பார்வார்டுபிளாக்கட்சிகளும், ஒரு சுயேச்சை அபேட்சகரும், போட்டிக்கு நிற்கிருர்கள். அருப்புக்கோட்டையில் திரு. முத்துராமலிங்கத்தேவரை காங்கிரசும் ஒரு சுயேச்சையும் எதிர்த்துப் போட்டியிடுகிருர்கள். திரு. தேவர் தற்போதைய அங்கத்தவர்.

### 8 தொகுதிகளில் மும்முனைப் போட்டி

பதின்நான்கு சட்டசபைத் தொகுதிகளில் 49 அபேட்சகர்கள் போட்டியிடுகிருர்கள், இவர்களில் 9 பேர் தற்போதைய எம். எல். ஏ க்கள் என்பது குறிப்பிடத்தக்கது. காங்கிரசிலிருந்து 14 பேரும், சுதந்திராவிலிருந்து 7 பேரும் பார்வார்ட் பிளாக்கிலிருந்து 4 பேரும், கம்யூனிஸ்ட்டிலிருந்து 4 பேரும், தி. மு. க. விலிருந்து 3 பேரும், பிரஜா சோஷலிஸ்ட், நாம் தமிழர், முஸ்லிம் லீக் ஆகியவற்றிலிருந்து தலா ஒருவரும், சுயேச்சைகள் 14 பேரும் போட்டியிடுகிருர்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டசபைத் தொகுதியில் மாத்திரம் காங்கிரசுக்கும் தி. மு. க. வுக்கும் நேரடிப் போட்டி ஏற்பட்டிருக்கிறது. 8 தொகுதிகளில் மும்முனைப் போட்டியும், 3 இடங்களில் நாற்கோணப் போட்டியும், ஒன்றில் ஐவரும் இன்னென்றில் ஆறுபேரும் போட்டிக்கு நிற்கிருர்கள்.

### இராமநாதபுரத்தில் இராமநாதபுர ராஜா

இராமநாதபுரம் சட்டசபைத் தொகுதியில் இராமநாதபுரம் ராஜா திரு. சண்முகராஜேஸ்வரசேதுபதி காங்கிரஸசார்பில் போட்டியிடுகிருர். சென்ற தேர்தலில் சுயேச்சையாக நின்று அவரை எதிர்த்த கம்யூனிஸ்டடை 31665 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்தவர். அத் தேர்தலில் காங்கிரஸ் இவருக்கு எதிராக எவரையும்நிறுத்தவில்லை. இம்முறை ஐந்துபேர் இத்தொகுதியில் போட்டியிடுகிருர்கள். முஸ்லிம் இங்கு அபேட்சகரை நிறுத்தியிருந்தபோதிலும் முஸ்லிங்களுக்கிடையே பெரும் பிளவு ஏற்பட்டிருக்கிறது. சுதந்திராக்கட்சி அபேட்சகர்களும் மற்றும்இரு சுயேச்சைகளும் கட்டுப்பணதலதை இழக்காதவாறு பார்த்துக் கொள்ளுவதில் முனைந்துள்ளன. இம் முறை கம்யூனிஸட் இத்தொகுதியிலிருந்து பின்வாங்கியிருக்கிறது.

### காரைக்குடியில் சங்குகணேசன்

காரைக்குடி சட்டசபைத் தொகுதியில் தமிழ்நாடு சுதந்திராக் சுதந்திராக் கட்சித் தலைவரான திரு. சா. கணேசன் சுதந்திராகட்சி ஆபேட்சகராகப் போட்டிக்கு நிற்கிருர். இவரை எதிர்த்து காங்கிரஸ, கம்யூனிஸ்ட் கட்சிகள் போட்டியிடுகின்றன. 1957 பொதுத் தேர்தலில் திரு. கணேசனை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு. முத்தையா செட்டியார் குறைந்த அதிகப்படி வாக்குகளால் வெற்றிபெற்ருர். இத்தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக தற்போதைய எம். பி. திரு. சுப்பையா அம்பலம் போட்டியிடுகிருர். கம்யூனிஸட் அபேட்சகராக திரு. ஆர். ஹலாஸ்யநாதன் நிற்கிருர்.

### "தீமையை சகிக்காது"

#### தொழிலாளருக்கு நேரு எச்சரிக்கை

போபால், பெப். 14

"தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளையும், குறைகளையும் கேட்டறிந்து விசாரிப்பதற்கு அரசாங்கம் எப்பொழுதும் தயாராக இருக்கிறது. ஆனல் நாட்டின் சுபிட்சப் பாதையின் முன்னேற்றத்துக்கு விளைக்கப்படும் தீங்கை அரசாங்கம் பொறுத்துக் கொள்ள முடியாது" என்று பாரதப் பிரதமர் நேரு நேற்று இங்கு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

போபால் நகரக மின்சாரத் தொழிற்சாலையில் நேற்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததுபற்றிக் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

இதுபோன்ற நாட்டின் சுபிட்சப் பாதையை முன்னேற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தங்கள் செய்கையை நன்கு உணர்ந்து நடக்கவேண்டும் என்று பிரதமர் கூறினர்.

### பாரிசில் 4 மணி நேர வேலை நிறுத்தம்

பாரிஸ்,பெப். 14

அல்ஜீரிய சுதந்திரத்தை எதிர்க்கும் ஐரோப்பிய தீவிரவாதிகளின் இரகசிய ஸ்தாபனத்துக்கு எதிராக பாரிசில் சென்ற வியாழக்கிழமை நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டுபோன எட்டுப் பேர்களின் பிரேத அடக்கத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

பிரே 5 ஊர்வலமும் பொதுக் கூட்டமொன்றும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழிலாளர் யூனியன் தலைவர்கள் பல ர்பசினர்.

இதற்கு முன்னதாக நான்கு மணி நேரம் பொது வேலை நிறுத்தமொன்றும் நடைபெற்றது. இந்த வேலை நிறுத்தத்தினல் தொழிற்சாலைகள், ரேடியோ நிலையம், பத்திரிகைக் காரியாலயங்கள் ஆகியவைகளின் அலுவல்கள்பாதிக்கப்பட்டன.

### முதுகுளத்தூர் தொகுதி

முதுகுளத்தூர் தொகுதியில் பார்வார்ட்பிளாக்கிலிருந்து திரு முத்துராமலிங்கத்தேவரின் சகாக்களில் ஒருவரான தற்போதைய எம். எல். ஏ. திரு. டி. எல். சசிவர்ணதேவர் போட்டிக்கு நிற்கிருர். இவரை எதிர்த்து இராமநாதபுரம் ராஜாவின் மைத்துனரான திரு. காசிநாததுரை காங்கிரஸ சார்பில் போட்டியிடுகிருர். இங்கு மும்முனைப்போட்டி இருக்கிறது. சுயேச்சையாக ஒவரும் போட்டியிடுகிருர்.

### முதலமைச்சர் காமராஜர்

சாத்தூர் சட்டசபைத்தொகுதியில் முதலமைச்சர் திரு.காமராஜர் காங்கிரஸ அபேட்சகராகப போட்டியிடுகிருர்- இவரை எதிர்த்து திரு. ராமசாமி (ரெட்டியார். பா. பி.)திரு. பி. ராமமூர்த்தி (சுத) ஆகியோர் போட்டியிடுகின்றனர். சென்ற தேர்தலில் இங்கு காங்கிரசுக்கிடையே பிரிவு இருந்தசமயத்திலும் திரு. காமராஜர் அமோக வெற்றியீட்டியவர்' இத்தேர்தலில் கம்யூனிஸட் மௌனம் சாதிக்கிறது முதலமைச்சர் வெற்றியைப்பற்றி சிறுவர்களும் சந்தேகம் கொள்ளவில்லை.

கடந்த தேர்தலில் 14 சட்டசபைத் தொகுதிகளில் காங்கிரஸ 7 ஸதானங்களைப் பெற்றது.

### முஸ்லிம்லீக் ஆதரவு?

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் மதுரை மக்கள்சபைத் தொகுதியில் போட்டியிடும் தமிழக சுதந்திராக் கட்சிச் செயலாளர் திரு. எஸ். எஸ. மாரிசாமிக்குத் தமிழக முஸலிம் லீக் ஆதரவு கொடுத்துள்ளது' முஸ்லிம் லீக் தலைவர் திரு. முகம்மது இஸ்மாயில் சுதந்திராக் கட்சிச் செயலாளருக்கு மேற்கண்ட தகவலை அறிவித்துள்ளார்: மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்தில் போட்டியிடககூடிய வேறு சில சுதந்திராக்கட்சி அபேட்சகர்களுக்கும் முஸ்லிம்லீக் ஆதரவு கொடுக்கும் என்றும் அறிவித்துள்ளனர். அதன் விபரம் வருமாறு:-சிவகெங்கை சட்டசபைத் தொகுதி சுதந்திராக் கட்சி அபேட்சகர் திரு. எம். காளிலிங்கம், திருவாடானை சட்டசபைத்தொகுதி அபேட்சகர் திரு. கரியமாணிக்கம் அம்பலம் மானமதுரை சட்டபைத் தொகுதி அபேட்சகர் திரு. கரு. சீமைச்சாமி, மதுரை மத்தியதொகுதி சட்டசபை அபேட்சகர் தரு. எஸ். தேவசகாயம், கிழக்குத் தொகுதி சட்டசபை அபேட்சகர் திரு. கே இராமுசேர்வை, திருமங்கலம் சட்டசபைத் தொகுதி அபேட்சகர் திரு. எம், சி. எம். முத்துஇராமத் தேவர் ஆகியோருக்கும் முஸ்லிம் லீக் இத்தேர்தலில் ஆதரவுகொடுக்கும்.

## உங்கள் தினப்பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு மாசிமாதம் 4-ந் தேதிவியாழக்கிழமை(15-12-62) பகல் 1.4ஃவரை ஏகாதசி. பின் துவாதசி. இன்று இரவு 11.45 வரை திருவாதிரை, பின் புனர்பூசம். மரணயோகம். இன்று எதிலும் பிரவேசியாது தெய்வ வழிபாட்டிலே காலம் கழிக்குக

### இன்று பிறந்தவர்களுக்கு

இன்று பிறந்தவர்களுக்கு இவ்வாண்டு நடுப்பகுதிவரை கஷ்டபலன்கள் சற்றுக் கூடுதலாக இருக்கும். பிற்பகுதி சுபகருமங்களும் சுப பலன்களும் நடக்க இடமுண்டு. கமத் தொழிலாளருக்கு முற்பகுதியில் கால், நடை நஷ்டங்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தர் சிறிது அவதானமாக நடக்கவேண்டும் பெண்களும் முற்பகுதியில் தெய்வ வழிபாட்டால் காலம் கழித்தல் வேண்டும். பிற்பகுதியில நற்பலன் தரும்.

### நட்சத்திரப் பலன்கள்

அச்சுவினி: பகை நிவர்த்தி நல்லோர் உறவு.

பரணி: பெண்கலால் கலகம், கவலை.

கார்த்திகை: பணவரவு, நல்லோர் நட்பு.

ரோகிணி: சகோதரரால் கஷ்டம், பணமுடக்கம்.

மிருகசீரிடம்:தார்மீகசிந்தனை, நன்மை

திருவாதிரை: கடும்உழைப்ரி, பலிதக்குறைவு.

பனர்பூசம்:வாக்கு வன்மை, நல்லோர் ஆதரவு.

பூசம்: பணவரவு, தொழில் வெற்றி.

ஆயிலியம்: தேகநலக்குறைவு, தொழிற்தாமதம்.

மகம்: பெண்களுதவி, குடும்ப நலம்.

பூரம்: பணக்கஷ்டம், கவலைகள்.

உத்தரம்: உழைப்புக்கேற்ற ஊதியம்,மகிழ்ச்சி

அத்தம்;முதியோர் பகை. கவலை.

சித்திரை: குடும்பசுகம், நற்கரும வெற்றி.

சுவாதி:கடும் உழைப்பு, ஞாபகமறதி.

விசாகம்:தார்மீக சிந்தனை, முதியோர் ஆதரவு

அனுஷம்:செய்தொழில்வெற்றி நன்மை.

கேட்டை:பணக்கஷ்டம். தொழிற்தடை.

மூலம்: முயற்சி வெற்றி நல்லோர் சேர்க்கை.

பூராடம்: வர்த்தக மந்தநிலை, கஷ்ட பிரயாணம்,

உத்தராடம்:உற்சாகம்,தொழில்மதிப்பு.

திருவோணம்: வீண் வாதம். பணக்கஷ்டம்.

அவிட்டம்: தார்மீக சிந்தனை, முதியோர் சேர்க்கை.

சதயம்:தேக நலக்குறைவு, பணக்கட்டம்.

பூரட்டாதி: நற்செய்தி, தொழில்வெற்றி.

உத்தரட்டாதி: சாதகமான செய்தி, தொழில் வெற்றி.

ரேவதி: கடும்உழைப்பு,முயற்சி பலிதக்குறைவு.

### செனிகலில் புரட்சித் திட்டம்

#### அரசாங்கம் நசுக்கிவிட்டது

லண்டன், பெப், 14

சென்ற வருஷம் விடுதலையடைந்த செனிகல் குடியரசின் சுதந்திர அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு செய்யப்பட்ட சதித்திட்டம் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் இதுசம்பந்தமாக பலர் கைதுசெய்யப்பட்டுடுள்ளதாகவும் செனிகல் அரசாங்கம் அறிவித்தது.

### ஆழக்கிணற்றுள் விழ்ந்தவர் மீண்டார்!

முள்ளியவளை, புதன்

சுமார் 60 வயதுடையவயோதிபர் ஒருவர் இங்குள்ள மராமத்து இலாகா காரியாலய வளவிலுள்ள 63 அடி ஆழமான கிணற்றுள் விழ்ந்து உயிர் தப்பியுள்ளார்! கால் தவறி விழுந்த அவரை அவரது உறவினர்கள் வெளியிலெடுத்தனர். சிறு சாயங்களுடன் அவர் உயிர் தப்பினர்.


### அந்தியகால சகாய நிதிச்சங்கம் | லிமிற்றெட்

சாவகச்சேரிப்பகுதிக்கு எங்கள் சங்கத்தின் சார்பில் திரு. பி. தம்பையா (இளைப்பாறிய ஓ. ஏ.) அவர்களை பிரதிநிதியாக நியமித்திருக்கிறேம். அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர்கள் சனிக்கிழமை அல்லாத நாட்களில் அவருடன் தொடர்பு கொள்ளவும். சனிக்கிழமை நாட்களில் காரியதரிசியை சாவகச்சேரிக் கந்தோரில் சந்திக்கலாம். காரியதரிசி அந்தியகால சகாயநிதிச் சங்கம், 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### தேவை

தகுதிவாய்ந்த செல்வாக்குள்ள, சாவகச்சேரியில் வசிப்பவருமான ஏஜெண்ட் ஒருவர் தேவை. கொமிஷன் கொடுக்கப்படும். காரியதரிசி, அந்தியகால சகாய நிதிச்சங்கம், 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் ... 15 நாள் மருந்து ... 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் அடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியா பரிபூரணுநந்தர், கைலாச ... யார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

# ஜெனிவா மகாநாட்டில் குருஷ்சேவ் கலந்துகொள்வார்

## கென்னடி, மாக்மிலன் இன்னும் முடிவில்லை

### பாரதப் பிரமருக்கு சோவியத் பிரதமர் கடிதம்

மாஸ்கோ, பெப். 14

மார்ச் மாதம் 14-ந் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவிருக்கும் 18 நாடுகள் கலந்துகொள்ளும் படையெடுப்பு மகாநாட்டில் அமெரிக்க ஜனதிபதி கென்னடியும், பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலனும் கலந்துகொள்ளாவிட்டாலும் சோவியத்பிரதமர் குருஷ்சேவ் கலந்துகொள்வாரென்று தெரிகிறது.

படைக் குறைப்பு மகாநாடு 18 நாடுகளின் அரசாங்கத் தலைவர்களும் ஒரு உச்சி மகாநாடாக அமைய வேண்டுமென்று சோவியத் பிரதமர் 18 நாடுகளுக்கும் யோசனை கூறியிருந்தார்.

இந்த யோசனையை அமெரிக்காவும் பிரிட்டனும் இதர மேற்கு நாடுகளுடன் கலந்தாலோசனை செய்து வருவதாகவும் "முதலில் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டு பின்னர் அரசாங்கத் தலைவர்கள் சந்தித்துப்பேசுவது நல்லது; பயனளிக்கக் கூடியது" என்று அவர்கள் கருதுவதாகவும் கூறப்பட்டது.

அமெரிக்க ஜனதிபதியும் பிரிட்டிஷ் பிரதமரும் படைகுறைப்பு மகாநாட்டில் நேரடியாகக் கலந்துகொள்ளாவிட்டாலும் திரு. குருஷ்சேவ் கலந்துகொள்ளக்கூடுமென்று தெரிகிறது. இந்த மகாநாட்டில் எத்தனை நாடுகளின் அரசியல் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என்பதைப் பார்த்து திரு. குருஷ்சேவ் இறுதி முடிவு செய்வார்.

**நேருவுக்கு கடிதம்**

சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் பாரதப் பிரதமர் திரு. நேருவுக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். கடிதத்தில் என்ன விஷயம்பற்றிக் குறிப்பிட்டுள்ளார் என்பது வெளியிடப்படவில்லையாயினும் படைகுறைப்பு மகாநாடு ஒரு 'உச்சி மகாநாட்டு' அந்தஸ்தில் நடைபெறவேண்டுமென்ற தமது யோசனையை திரு. குருஷ்சேவ் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருக்கக் கூடுமென்று நம்பப்படுகிறது.

**கோட்பாடுகள் அடிப்படை**

ஐ. நா. பொதுச் சபையின் சென்ற கூட்டத்தின்போது அமெரிக்காவும் பிரிட்டனும் ஒப்புக் கொண்ட படைபலக் குறைப்பு கோட்பாடுகள் ஜெனிவா பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக இருக்கலாம் என்று சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் 18 நாடுகளுக்கும் அனுப்பியுள்ளதாக தமது கடிதத்தில் கூறியிருக்கிறார்.

இறுதியில் பொதுபடைபலக் குறைப்பை அடையும் நோக்கத்துடன் அணுஆயுதப் போட்டியைக் கட்டுப்படுத்துவதற்கான, நடவடிக்கைகள், பெரிய வல்லரசுகளின் ராணுவ நிறுவனங்களைக் கலைக்கும் வேலையை ஆரம்பிப்பதற்கான நடைமுறை இந்தக் கோட்பாடுகளில் அடங்கியுள்ளன.

**கலந்துகொள்ளும் நாடுகள் விபரம்**

ஜெனிவா மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டிய 18 நாடுகளின் விபரம் வருமாறு: **மேற்கு நாடுகள்** - அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், கனடா, இத்தாலி. **கம்யூனிஸ்ட் நாடுகள்** - ரஷ்யா, பல்கேரியா, செக்கோஸ்லவாக்கியா, போலந்து, ருமேனியா. **நடுநிலைமை நாடுகள்** - பிரேசில், பர்மா, எத்தியோப்பியா, இந்தியா, மெக்ஸிக்கோ, சுவீடன், ஐக்கியஅரபுக் குடியரசு, நைஜீரியா.

## அவசர முடிவு இல்லை!

வாஷிங்டன், பெப். 13

படைக்குறைப்பு சம்பந்தமாக 18 நாடுகளின் மகாநாட்டில் அரசாங்கத் தலைவர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்ற சோவியத் பிரதமர் குருஷ்சேவின் யோசனையை அமெரிக்கா அவசர அவசரமாக ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ மாட்டாது என்று அமெரிக்க ராஜாங்க வட்டாரங்கள் இன்று தெரிவித்தன.

## ஆந்திராவில் கனரக யந்திர தொழிற்சாலை

ஹைதராபாத் பெப். 14

ஆந்திராவில் ராமச்சந்திரபுரத்தில் அமைக்கப்பட்டு வரும் கனரக யந்திர தொழிற்சாலை 1965-ம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கிவிடும்.

செக்கோஸ்லவாக்கியா வின் உதவியுடன் நிறுவப்படும் இத்தொழிற்சாலை முழுவதுமாக வேலைசெய்யத் தொடங்கும் போது அங்கு 6,500 தொழிலாளர்கள் வேலைசெய்வார்கள்.

லாவோஸ்

## பூமா—மன்னர் சந்திப்பு

வியன்டைன், பெப். 14

லாவோசின் நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்ன பூமாவை லுவாங் பிரபாங்கில் சந்திப்பதற்கு லாவோஸ் மன்னர் சவன்னவத்தன சம்மதம் தெரிவித்துள்ளார். மன்னரை வெள்ளிக் கிழமை சந்திக்க இளவரசர் சுவன்ன பூமா முன்னர் அனுமதிகோரியிருந்தார்.

## கேரளத்தில் சிறு தொழில்திட்டம்

திருவனந்தபுரம், பெப். 14

கேரளத்தில் 39 சிறிய தொழில்களை அமைப்பதற்கான திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்துள்ளது.

# "சதி விசாரணையை அரசியலாக்காதீர்"

## திரு. டட்லி கோரிக்கை

கொழும்பு, புதன்

**சதித்திட்டம் சம்பந்தமான விசாரணையை அரசியல் நோக்கத்துக்காகத் திருப்பிவிடவேண்டாமென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா நேற்று பார்லிமெண்டில் கேட்டுக்கொண்டார். "ஓளவு எதேச் சதிகாரம்" என்று நிதி மந்திரி ஒரு கூட்டத்தில் கூறியதைப்பற்றியும் சதிபற்றி விசாரிப்பவர்கள் ஆராய்ந்திருக்கவேண்டும் என்று திரு. டட்லி கூறினா.**

ஜனப்பிரதிநிதிகள் சபை, சபாநாயகர் ஆர். எஸ். பெல்பொல தலைமையில் செவ்வாய்க் கிழமை பிற்பகல் கூடியபொழுது தோல்வியடைந்த சதித்திட்டம் பற்றி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா அறிக்கை விடுத்தபின் நடைபெற்ற விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் யு. என். பி. தலைவருமான திரு. டட்லிசேனநாயக்கா பேசுகையில், "தோல்வியில் முடிவடைந்த ஒரு புரட்சிச் சதித்திட்டத்தை அரசியல் நோக்கங்களுக்காக நீங்கள் உபயோகிக்கிறீர்கள் என்பதை நாடு அறிந்துகொள்ளும் எங்கள் கண் முன்னலேயே நாங்கள் ஒரு சதியைப் பார்க்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

திரு. டட்லி சேனநாயக்கா இது பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

திரு. பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்ட சமயம் கொலையில் யு. என். பி. யையும் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவையும் கூட சம்பந்தப் படுத்தக் கூடிய வகையில் மறைமுகமாகப் பேச்சுக்கள் டைபெற்றன. ஆனல் பூரண விசாரணையின் பின் யு. என். பி. யைச் சேர்ந்த ஒருவர்கூட கொலையில் எவ்வித தொடர்பும் கொண்டிருந்ததாகக் கண்டு பிடிக்கப்படவில்லை.

அரசாங்கம் தனது சொந்த அரசியல் நலனுக்காக இந்த விசாரணையின் போக்கைத் திருப்பி அதைக்கெடுத்துவிட அரசாங்கம் விரும்புகிறதா?

சதித் திட்டத்தில் ஈடுபட்ட கோஷ்டியைப் பார்த்தால் இது திரு. பண்டாரநாயகர்வின் கொலையின் தொடர்ச்சியாகவே தோன்றுகிறது.

சதித்திட்டம் சம்பந்தமான விசாரணைகளை வேறு திசைக்குத் திருப்பிவிட வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நிதிமந்திரி: நீங்கள் எதற்காக கவலைப்படுகிறீர்கள்?

திரு. டட்லி: நான் ஏன் கவலைப்படுகிறேன்? இதில் என் பெயரும் தெளிவாக இழுக்கப்பட்டுள்ளது. என் மீது ஏதாவது இருந்தால் என்னைக் கைதுசெய்யுங்கள். நான் அஞ்சவில்லை. என்னை விசாரணை செய்யுங்கள் நான் சில விஷயங்களைச் சொல்வேன். உண்மையில் இப்பொழுது சில விஷயங்களைத் தெரிவிக்கப் போகிறேன். அச்சடிக்கப்பட்ட அறிக்கையில்கூட நிதிமந்திரி திருத்தம் செய்துள்ளார்.

நிதிமந்திரி: இது உண்மை விபரங்களைக் கொண்ட அறிக்கை. இதில் மறைமுகச் சாட்டு எதுவும் இல்லை.

திரு. ஜே. ஆர்.: இதை வாபஸ் பெறுங்கள்.

திரு. டட்லி: வேண்டாம். அதை நீங்கள் வாபஸ் பெற வேண்டுமென்று நான் விரும்பவில்லை. அதுவும் சேர்க்கப்பட்டுள்ளது. எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்களென்பதை நாடு தெரிந்துகொள்ளும்.

திரு. டட்லிசேனநாயக்கா மேலும் குறிப்பிட்டதாவது:—

சதித்திட்டம் சம்பந்தமாக எந்தச் செய்தியும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவது தடைசெய்யப் பட்டுள்ளது என்றாலும் இதில் யு. என். பி.யைச் சம்பந்தப் படுத்தக் கூடிய விதமான சூசகமற்ற விஷயங்களைப் பிரசுரிக்கப்படுகிறது. சதித்திட்டம் பற்றி யு. என். பி. கூறியவை தணிக்கை செய்யப்பட்டுவிட்டன.

இரத்தினபுரி எம். பி. திரு. (தனபாலவீரசேகரா) ஒரு கூட்டத்தில் பேசுகையில் முக்கிய அரசியல் கட்சியொன்று சதித்திட்டம் பற்றி அபிப்பிராயம் கூறவில்லையென்று அநேகமாகத் தெரியாத்தனத்தினல் கூறியிருக்க வேண்டும். அநேகமாக அவர் யு. என். பி. யைத்தான் கருத்தில் கொண்டு கூறியிருக்க வேண்டும். அவருக்கு உண்மை விபரம் தெரியவில்லை. செனட் சபையில் முதல் தடவை சதித்திட்டம் பற்றி தெரிவிக்கப்பட்ட பொழுது யு. என். பி. யின் சார்பில் செனட்டர் (டாக்டர்) எம். வி. பி. பீரிஸ் நீண்ட நேரம் பேசினர். சில பத்திரிகைகள் அவருடைய பேச்சை பிரசுரித்தன. மற்றவை பிரசுரிக்காமல் விட்டுவிட்டன.

நுகேகொடையில் பெப்ரவரி 4-ந் திகதி நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நான் பேசிய போது சதித்திட்டம் பற்றிக் குறிப்பிட்டேன் தகுதிவாய்ந்த அதிகாரியின் உத்தரவின்மீது சதிபற்றி நான் குறிப்பிட்டவை தணிக்கை செய்யப்பட்டுவிட்டன.

திரு. எட்மன் சமரக்கொடி கூறியதாக வெளிவந்த ஒரு செய்தியை திரு. சமரக்கொடியே மறுத்துள்ளார்.

திரு. சமரக்கொடி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நான் ஒரு உரை நிகழ்த்திய போது சதித்திட்டத்தில் யு. என். பி. யும் சம்பந்தப்பட்டிருபதாகத் தெரிவித்ததாக ஒரு செய்தி வெளிவந்திருந்தது. அந்த உரையில் எந்த அரசியல் கட்சியையும் நான் குறிப்பிடவில்லை.

திரு. டட்லி: இந்த ஒன்றே நிரூபிக்கவில்லையா? திரித்துக் கூறும் விஷயங்கள் தணிக்கைக்கு தப்பிவிடுகின்றன. தணிக்கை அதிகாரி சில சமயம் இல்லாத விஷயங்களைக் கூட சேர்த்து விடுவார்.

(5 -ம் பக்கம் பார்க்க )

# நாட்டை எதிர்நோக்கியுள்ள பயங்கரமான நிலைமை

## எட்மண்ட் சமரக்கொடி பேச்சு

கொழும்பு, புதன்

"ஒரு பயங்கரமான [illegible]மையை நாடு எதிர்நோக்கியுள்ளது. சதித்திட்டத்தினல் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையைத் திருப்தியான முறையில் அரசாங்கம் சமாளித்துவிடும் என்பது சந்தேகம். பொதுத் தேர்தல் ஒன்றில் ஐக்கியதேசியக்கட்சி வெற்றியீட்ட [illegible] பதை உணர்ந்த கட்சியினர் புரட்சியின் மூலம் பலாத்காரமாக அதிகாரம் பெற்றுக் கொள்ள முன்வந்துள்ளார்கள்."

இவ்வாறு புலத்சிங்கள எம். பி. திரு. எட்மண்ட் சமரக்கொடிபேராதனைப்பல்கலைக்கழகத்தில் 'இன்றையஅரசியல் நெருக்கடி' என்னும்பொருள்பற்றி பேசுகையில் கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நாட்டு மக்களின் நலனுக்காக தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் சதி வேலைகள் சம்பந்தமாக இரசாங்கம் ஆலோசிக்க வேண்டும்."

எம். ஈ. பி. ஆட்சி பீடத்தில் அமர்ந்த காலம் தொடக்கம் இதுவரை உள்ள அரசியல் நிலைமைகளைத் திரு. சமரக்கொடி விரிவாகக் கூறினர். சதித்திட்டம்பற்றி விரிவாகப் பேசுவதற்கு சட்டம் தடைபோடுவதால் இன்றையநிலை பற்றி விரிவாகக் கூறமுடியாதிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## பர்மிய தேர்தல் கமிஷனர்

### இந்தியா வருகிறர்

புதுடில்லி, பெப். 14

பர்மிய பிரதம தேர்தல் கமிஷனர் யுதின் தலைமையில் பர்மிய தேர்தல் கமிஷன் கோஷ்டியொன்று நாளை புதுடில்லி வந்து சேரும். இந்தியாவில் நடைபெறவிருக்கும் தேர்தல்களை இக் கோஷ்டி ஆராய்ந்து அறிந்துகொள்ளும் இந்திய பிரதம தேர்தல் கமிஷனர் திரு. கே. வி. கே. சுந்தரத்தையும் மற்றும் தேர்தல் அதிகாரிகளையும் இக் கோஷ்டியினர் சந்தித்துப்பேசுவர் இக்கோஷ்டி இந்தியாவில்13 தினங்கள் தங்கியிருக்கும்.

## டில்லியில் நைஜீரிய மந்திரி

புதுடில்லி, பெப். 14

நைஜீரிய தபால் தந்தி மந்திரி நேற்று புதுடில்லி வந்து சேர்ந்தார். இந்தியாவில் ஆறு தினங்கள் சுற்றுப்பிரயாணம் செய்யவிருக்கும் இவர் நேற்று உபராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணனைச் சந்தித்தார். தபால் தந்திப் பகுதி அதிகாரிகளையும் நைஜீரிய மந்திரி சந்தித்துப் பேசினர்.

மணி வாக்கு

"அழகுக்கு அணிகள் தேவையில்லை. அணிகளைப் போடாதபோதே நிறைய அணிகள் போட்டுக்கொள்வதாகும்."

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
மாசி ஸ்ரீ 4 உ (15 - 2 - 62)

## யாழ்ப்பாண மேயர் தேர்தல்

**யா**ழ்ப்பாண மாநகர சபையின் புதிய மேயர் தெரிவு வருகிற 19-ந் திகதி திங்கட்கிழமை நடைபெற இருக்கின்றது. இப்போதுள்ள ஸ்தல ஸ்தாபன சட்டப்படி, மேயரின் பதவி காலம் மூன்று வருடமாகும். ஆனல் சென்ற ஆண்டிலே, மாநகர சபை மெம்பர்கள் பலர் தவிப்பட்ட முறையில் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தப்படி, ஒரு வருட காலம் முடிந்ததும், உதவி மேயரும், மேயரும் தங்கள் பதவிகளை ராஜினமாச் செய்துவிட்டனர். உதவி மேயர் பதவிக்கு திரு. துரைராஜசிங்கம் போட்டியில்லாமல் தெரிவு செய்யப்பெற்ருர். புதிய மேயரும் போட்டியில்லாமல் ஏ[illegible] தெரிவு செய்யப்படுவது பெரிதும் [illegible]ரும்பத்தக்கதாகும்.

மேயர், உதவி மேயர் பதவிகளுக்கு பொதுவாக எங்கும் அதிகமான போட்டிகள் இருப்பதைப் பார்க்கிருேம். நகரின் மிகக் கௌரவமான அப்பதவிகளுக்கு போட்டிகள் இரு[illegible] இயற்கையே. ஆனல் போட்டி காரணமாக நகரசபை நிர்வாகத்துக்கே பாதகமேற்படுவதுடன், சபை மெம்பர்களிடையே நல்லுறவும் ஒத்துழைப்புமின்றி, மனக்கசப்புகள் அதிகரிக்கவும் காரணமாகின்றது. நகர மக்களின் மேலான நன்மையை முன்னிட்டு, இப்போட்டிகளைக் கூடுமானவரை குறைக்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்வது அவசியம்.

சென்னை காப்பரேஷனில் மேயர் தேர்தல் வருடா வருடம் நடைபெறுகிறது. அதனல், அதிகமானவர்களுக்கு அந்தக் கௌரவப் பதவி கிடைக்கக் கூடியதாக இருக்கும். மேலும் பல ஆண்டுகளுக்கு முன்பாக, அச்சபை மெம்பர்கள் சேர்ந்து மேயர் தேர்தல் பற்றி ஒரு கனவான்கள் ஒப்பந்தம்செய்து கொண்டனர். ஒரு வருடத்துக்கு முறையே ஒரு சாதியினர் மேயராகத் தெரிவு செய்யப்படவேண்டுமென்பதே அந்த ஏற்பாடு. சபையிலுள்ள அந்த குறிப்பிட்ட சாதியினர், முதலில் அந்தரங்கமாகக் கூடி தங்களுக்குள் ஒருவரை அவ்வருடத்துக்கு பூர்வாங்க தேர்தலில் மேயராகத் தெரிவு செய்வர். அப்படித் தெரிவு செய்யப்பட்டவரை, பின்னர் சபை பகிரங்கமாகக்கூடி ஏகமனதாகத் தெரிவு செய்ய வேண்டும் என்பதே அந்த ஒப்பந்தம். இதில் சில குறைகள் இருப்பினும் 25 வருட காலத்துக்கு மேல் அங்கு இந்த ஒப்பந்தம் அமுலில் இருந்து வருகிறது. இதனல் பல சாதி, மதத்தவரும் மேயராகப் பதவி வகிக்க வாய்ப்புக் கிடைப்பதுடன், மேயர் தேர்தல் போட்டிகளும், மனக் கசப்புகளும் குறைந்து அந்தப் பதவியின் மதிப்பும் காப்பாற்றப்படுகின்றது.

இலங்கையிலும் மேயர், உதவி மேயர் பதவி காலத்தை சட்டப்படி ஒரு வருடமாகக் குறைப்பது நல்லது. மேலும் அன்ருட நிர்வாகப்பொறுப்பையும் அதிகாரத்தைம் நிர்வாக அதிகாரியான கமிஷனரிடம் ஒப்புவித்து, மேயர், கட்சிபேதங்களுக்கு அப்பாற்பட்ட சட்டரீதியான அதிபர் போல் இருப்பது, அந்தப் பதவியின் மதிப்பை ஓங்கச் செய்யும். இவ்வித திருத்தங்களைச் சட்டபூர்வமாகச் செய்ய இங்கு உடனடியாக முடியாவிடினும், நகரின் மேலான நன்மையையும், மேயர் பதவியின் மதிப்பையும் கருதி, மாநகரசபை மெம்பர்கள் தங்களுக்குள், இது பற்றி நல்லதோர் 'கனவான்கள்' ஒப்பந்தம் செய்து கொண்டு பிரதி வருடமும் போட்டியின்றி ஏகமனதாகத் மேயரை தெரிவு செய்வது யாழ்ப்பாணத்தின் மதிப்பை உயர்த்துவதுடன், மற்றவர்களுக்கும் மேலானதோர் முன்மாதிரியுமாகும்.

# அமெரிக்க காங்கிரஸ் 87-வது மகாநாடு

## முக்கிய தீர்மானங்கள்

—செனட்டர் டக்ளஸ்—

*1938-ம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்க காங்கிரஸ் இப்போதுதான் தீவிரமாகச் செயல்படுகிறதெனக் கூறப்படுகிறது.*

செனட் சபைக்கு 1948-ல் நான் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து 1961-நடைபெற்ற 87-வது பொதுச் சபைக் கூட்டமே (காங்கிரஸ்) மிகச் சிறப்பாக நடைபெற்றது. தெளிவாகக் கூறினல், 1938-ல் இருந்து அதிகமாகச் செயலாற்றியது இந்த 87-வது காங்கிரஸ்தான். இதற்கு ஜனதிபதி கென்னடியின் தலைமைத்துவம் முக்கியமான காரணமாகும்.

1961-ஜனவரி 20-ல் ஜனதிபதி கென்னடி பதவிக்கு வந்ததும் முக்கியமான கடமைகளில் ஈடுபட்டார். புதிய நிர்வாகத்தில் கொள்கை வகுக்கும் 1,500 பேரை அவர் தேர்ந்தெடுத்தார். மேலும் ராணுவம், வெளிவிவகாரம் ஆகியவற்றுக்கு ஆயிரக்கணக்கானவர்களை அவர் நியமித்தார்.

அவ்வாண்டில், காங்கிரஸ் தனது சட்டம் இயற்றும் திட்டங்களுக்கு ஜனதிபதி கென்னடியும் அவரது ஊழியர்களும் 105 செய்திகளை அனுப்பினர். எந்தச் சட்டமும் வகுக்கப்படுமுன் அதுபற்றி ஜனதிபதியும் அவரது உதவியாளர்களும் முடிவு செய்தனர். 1961-ல் உலகம் முழுவதிலும் பல பிரச்சினைகளை ஜனதிபதி கென்னடி எதிர் நோக்கினர். பெர்லின், காங்கோ, லத்தீன், அமெரிக்கா, லாவோஸ், ஹமர்ஷீல்ட் மரணம் ஆகிய பல பிரச்சினைகளை அவர் சமாளித்தார். பின் கடந்த செப்டம்பரில் அரசியல் சூழ்நிலைகளில் மாறுதல் தோன்றின. காங்கிரஸ் ஆரம்பமானபோது, 86-வது காங்கிரஸ் நடைபெற்றபோது இருந்ததைவிட இரு மன்றங்களிலும் ஜனநாயகக் கட்சியின் பெரும்பான்மை சிறிதாக இருந்தது. 1960-ல் ஜனநாயகக்காரர்கள் 284 பேர்களும், குடியரசுக்காரர்கள் 153 பேர்களும் மன்றத்தில் அங்கம் வகித்தனர். மறு ஆண்டில் ஜனநாயகக் கட்சிக்காரர்கள் 263 பேர்களும், குடியரசுக்காரர்கள் 174 பேர்களும் இருந்தனர். முந்திய காங்கிரஸ் 65 ஜனநாயகக் கட்சிக்காரர்களும், 35 குடியரசுக் கட்சிக்காரர்களும் செனட்டர்களாக இருந்தனர். ஆனல் 87-வது காங்கிரஸில் டக்ளஸ் தொகுதியில் குடியரசுக் கட்சிக்காரர் செனட்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார். எப்படியிருந்த போதிலும் பல பிரச்சினைகளுக்கு அதிகமான ஆதரவு கிடைத்தது. இதற்காக ஜனதிபதியின் தலைமைத்துவத்திற்கும் உறுதிக்கும் நன்றி செலுத்த வேண்டும். உதாரணமாக, நீண்ட நாள் கடனுக்கான ஜனதிபதியின் கோரிக்கை 1959-ல் 42க்கு 48 விகிதத்தில் செனட் சபையில் நிராகரிக்கப்பட்டது. 1961-ல் ஜனதிபதியின் ஐந்தாண்டு கடன் திட்டம் 39 க்கு 56 வாக்குகள் பெற்று நிறைவேறியது. 87-வது காங்கிரஸின் முதல் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டவை வருமாறு:-

1. வேலையில்லாத் திண்டாட்டம் உள்ள பகுதிகளுக்கு உதவுவதற்கான மசோதா.

2 மணிக்கு அடிப்படைச் சம்பளத்தை டாலர் 1-25 ஆகக் கூட்டியது.

3. சிறந்த வீடமைப்பு மசோதா நிறைவேற்றப்பட்டது.

4. 44 லட்சம் பேர்களுக்கு சமுதாயப் பாதுகாப்பு நலன்கள் அதிகரிக்கப்பட்டது. ஓய்வு பெறும் வயதை 62 ஆகக் குறைக்கப்பட்டது. விதவைகள், முடியாதவர்களுக்கான வசதியை அதிகரிக்கப்பட்டது.

5. வேலையில்லாதவர்களுக்கான உதவித்தொகை அதிகரிக்கப்பட்டதுடன், முதல் தடவையாக வேலையில்லாதவர்களின் குழந்தைகளுக்கும் உதவி அளிக்கப்பட்டது.

6. தானியங்கள் விநியோகம் உற்பத்தி சம்பந்தமான சிறந்த திட்டம் நிறைவேறியது.

7. வெளி நாடுகளுக்கு உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ், நீண்ட நாள் தவணையில் கடன் கொடுக்கும் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

8. பஞ்சம் ஏற்பட்ட நாடுகளுக்கு உதவுவதற்காக உணவு, சமாதான நிறுவனம் அமைக்கப்பட்டது.

9. சமாதானப் படை ஒன்று அமைக்கப்பட்டது.

10. நாட்டோ இணைந்துள்ள ஓ. இ. சி. டி. ஸ்தாபனத்தில் நமது அங்கத்துவம் உறுதி செய்யப்பட்டது.

எதிர்வரும் 87-வது காங்கிரஸில் தீர்க்கப்பட வேண்டிய விஷயங்களும் ஏராளமாக இருக்கின்றன. ஐரோப்பிய பொது மார்க்கட்டுடன் சமத்துவ அடிப்படையில் பேரம் பேசுவதற்கான ஒரு வர்த்தகச் சட்டத்தை நிறைவேற்றுவது அவைகளில் மிகவும் முக்கியமானதாகும். முதியவர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பது மற்ருெரு பிரச்சினையாகும். வருமான வரிச் சட்டத்தில் உள்ள சந்து பொந்துகளை அடைக்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்படும். மற்ருெரு பிரச்சினை, சிவில் உரிமைகள் முன்னையவிட மிக அதிகமான உயர் பதவிகளுக்கு நீக்ரோக்களை ஜனதிபதி கென்னடி நியமித்துள்ளார். எல்லாப் பிரஜைகளுக்கும் சமத்துவ உரிமையளிக்கும் அரசியல் சட்ட 14-வது திருத்தத்தை அமுல் செய்ய ஜனதிபதிக்கும் அட்டர்னி ஜெனரலுக்கும் அதிகாரமளிக்கும் புதிய சட்டத்தை நாம் நிறைவேற்ற வேண்டும்.

## அல்ஜீரிய பேச்சுவார்த்தை

பாரிஸ், பெப். 14

அல்ஜீரிய தற்காலிக அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் பிரஞ்சு அரசாங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் பிரஞ்சு-சுவிட்சர்லாந்து எல்லையில் இரகசியமாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம்பற்றி அல்ஜீரிய விவகாரங்களுக்கான பிரஞ்சு மந்திரி நாளை பிரஞ்சு மந்திரி சபைக்குத் தெரிவிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## ரொடீஷியாவுடன் தொடர்பில்லை

லண்டன், பெப். 14

தென் ரொடீஷியாவுடன் எவ்விதமான தொடர்பும் இனி வைத்துக் கொள்ளப்போவதில்லையென்று நியாலாந்து ஆபிரிக்க விடுதலை இயக்கத் தலைவரான டாக்டர் ஹேஸ் டிங்ஸ் பண்டா தெரிவித்தார்.

## பயமின்றி வாழும் சுதந்திரம் ஜனநாயக ஆட்சிக்கு அவசியம்

மாதவலமுல்லா, புதன்

"ஜனநாயக நாடு ஒன்றில் பயமின்றி வாழ்வதற்கும் அடிமை முறைகளைத் தகர்த்தெறிவதற்கும் சுதந்திரம் இருக்கவேண்டும். தத்தம் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதற்கு மக்களுக்குப் பூரண சுதந்திரம் இருக்கவேண்டும். பௌத்த பிக்குகளின் சுதந்திரம் இன்றுபாதிக்கப் பட்டு வருவதை யாவரும் அறிவார்கள். இன்றைய ஆட்சி ஜனநாயக ஆட்சி அல்ல. அதற்கு முற்றிலும் முரணன ஆட்சி"

இவ்வாறு காலி எம். பி. திரு. டபிள்யு தஹநாயக்கா மாதவலமுல்லா 'ஜூனியர்' பார்லிமெண்டின் ஆரம்ப கூட்டத்தில் பேசும் போது கூறினர்: திரு. தஹநாயக்கா தொடர்ந்து பேசுகையிற் குறிப்பிட்டதாவது

"பௌத்த பிக்குகள் பயிற்சிக் கல்லூரி புகுவதற்கும், ஆசிரிய நியமனம் பெறுவதற்கும் இன்றைய அரசாங்கம் தடைவிதித்துள்ளது. இந்த நிலைமையில் ஆசிரியராகவிரும்பும் பிக்கு ஒருவர் தமதுபிக்குஉடைகளைக் களையவேண்டியவராகின்ருர். கல்வி பற்றி திரு. தஹநாயக்கா தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:

"கல்வி அமைச்சர் பதவியிலிருக்கையில் நான் ஆரம்பித்து வைத்த பெரு முயற்சிகளுக்கெல்லாம் இன்றைய அரசாங்கம் முட்டுக்கட்டையாக விருக்கின்றது. நல்லெண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட அம்முயற்சிகள் இன்று நசுக்கப்பட்டுள்ளன. பிக்குகளுக்குக் கல்வி வாய்ப்புக்கிட்டும் வகையில் பிரிவேனுப்பல்கலைக்கழக மசோதா வைத்தொடக்கி வைத்தேன். அரசாங்கம் இதற்கு எதிர்மாருகநடந்து வருகிறது."

## ஐயாறன் எழுதுவது

இலங்கைக்கு வருமுன்பாக திருச்சியிலே இரண்டு நாள் தங்கி அங்கு நடைபெறும் தேர்தல் அமர்க்களங்களைக் கண்டேன்.

இரவு 12 மணி இருக்கும். ஒரு வாலிபர், திருச்சி ஜங்ஷனுக்கு வெளியே கறுப்பு, சிவப்பு (தி. மு. க.) கொடியைப் பிடித்துக் கொண்டு ஓர் உண்டியலை வைத்துக் குலுக்கினர். தேர்தல் பிரசாரத்துக்கு இப்படிப் பல வாலிபர்கள் பணம் வசூலிக்கிருர்கள்.

ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் ஏறிச் சென்றேன். அந்த ரிக்ஷா இழுக்கும் வாலிபரிடம் பேச்சுவிட்டேன். தேர்தலில் யாருக்கு வாக்களிக்கப்போவதாகக் கேட்டதற்கு "வேறு யாருக்கு அளித்தாலும் சரி, மாட்டுப்பெட்டிக்கு மட்டும் ஓட்டுப் போட மாட்டேன்" என்று கூறியதுடன் "நீங்களும் மாட்டுப்பெட்டிக்கு ஓட்டுப் போடாதீர்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

ஏன் என்று கேட்டதற்கு, "தினசரி இந்த ரிக்ஷாவுக்கு இரண்டரை ரூபாய் முதலாளிக்கு வாடகை கட்ட வேண்டும். ஒரு நாள் ஸ்டிரைக் செய்து ஆட்சேபம் தெரிவித்தோம். பயன் இல்லை. காங்கிரஸ் கட்சி முதலாளி கட்சி. திரும்ப, காங்கிரஸ் ஆட்சிக்கு வந்துவிட்டால், வாடகை மேலும் உயரும் குறையாது. அதனல் தயவுசெய்து மாட்டுப் பெட்டிக்கு ஓட்டுப் போடாதீர்கள்..." என்று சைக்கிள் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டே மன்ருடினர்.

எனக்கு ஓட்டில்லை என்றும் வேறு நாடென்றும் கூறியும், அவர் விடவில்லை. "இங்கு உங்கள் நண்பர்களிடம் பேசும் போது, மாட்டுப் பெட்டிக்கு ஓட்டுப் போட வேண்டும் என்று கூறுங்கள்" என்ருர்.

தி. மு. க. அபேட்சகரான மணி என்பவர் சைக்கிள் ரிக்ஷாக்காரர் சங்கத் தலைவராம். பல சைக்கிள் ரிக்ஷாக்களும் தி. மு. க. கொடிகளுடன் செல்லுகின்றன.

* * *

மறுநாள் காலையில் காங்கிரஸ் சைக்கிள் ஊர்வலம் நடந்தது. சுமார் ஒருமைல் நீளத்துக்குமேல் ஆயிரக்கணக்கான சைக்கிள்கள் காங்கிரஸ தி. க. கொடிகளுடனும் கோஷங்களுடனும், திருச்சியிலே [illegible] ஊர்வலம் சென்றன. ஒரே சைக்கிளில் காங்கிரஸ், தி. க. கொடிகள் சேர்ந்து பறக்கின்றன.

நான்கு நாட்களுக்கு முன்பாக அங்கு தி. மு. க. சைக்கிள் ஊர்வலம் இதேபோல் நடந்ததாம். இரண்டு ஊர்வலங்களிலும் அரசியல் வேற்றுமையின்றிப் பல சைக்கிள்காரர்கள் நடுநிலையுடன் கலந்து கொள்வதாயும், ஒரு நாளைக்கு மூன்று ரூபாயென்றும் நண்பர் தெரிவித்தார்.

கட்டை வண்டி யுகம்மாறி இது சைக்கிள் யுகம் என்று பிரதமர் நேரு சென்னை கூட்டத்தில் கூறியதை நேரில் கண்டேன்.

* * *

தெருவெல்லாம் சுவரெல்லாம் தேர்தல் கோஷங்கள். சைக்கிள் ரிக்ஷாவிலே லவுட்ஸ்பீக்கர் வைத்து, தெருத் தெருவாக தேர்தல் பிரசாரம். மரங்கள், வீடுகள், கோவில் கோபுரங்கள் முதலிய இடங்களிலெல்லாம் பல பல கட்சிக் கொடிகளும் பறக்கின்றன.

திருச்சி முனிஸிப்பல் மண்டபத்துக்கு முன்பாக ஏதோ பரபரப்பாக இருந்தது. பொலிஸ் படைகள் காவல் புரிந்தன. வாசல்பக்கம் ஒரு சின்னக் கொட்டகை போட்டு தி. மு. க. கொடி ஏற்றியிருந்தனர்.

(4ம் கலம் பார்க்க)

### ஐயாறன்

(5ம் கலத் தொடர்ச்சி)

என்ன என்று விசாரித்ததில் அந்த மண்டபத்தில் எம். ஜி. ஆர். தேர்தல் பிரசாரக் கூட்டம் நடத்த இருந்தாராம். தி. மு. க. தேர்தல் நிதிக்காக 5, 3, 2, 1 என்று அக்கூட்டத்துக்கு டிக்கெட்டும் வைத்திருந்தனர். ஆனல் முதல்நாளன்று கூட்டத்துக்கு மண்டபம் தர முடியாதென்று மறுத்துவிட்டார்களாம். இதை எதிர்த்து அபேட்சகர் மணி, அந்த மண்டபத்துக்கு முன் "சாகும்வரை உண்ணுவிரதம்" இருக்கப்போவதாயும், அதுதான் பரபரப்பு என்றும் அறியவந்தேன்.

தேர்தல் ஜுரம் வரவர அதிகரித்து 106 டிகிரிக்கு உயர்ந்து "ஜன்னி" கண்டுள்ளது. இரண்டொரு கொலைகளும் நடந்துள்ளன. பொதுமக்களை யாரும் ஏமாற்றமுடியாதென்றும், அரசியல் அறிவு அவர்களிடையே அவ்வளவு அதிகரித்திருப்பதாயும் பலரும் தெரிவித்தனர்.

திருச்சி, சென்னை முதலிய நகரங்களிலே மூவர்ண பலூன்கள் ஆகாயத்தில் பறந்து "காங்கிரஸ வாழ்க" என்ற பிரசாரம் செய்கின்றன. யாருக்கு வெற்றி என்று பலரையும் கேட்டேன், "காங்கிரஸுக்குத் தான்" என்ற பதிலே அதிகமாகக் கிடைத்தது.

# "சதி விசாரணையை...

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சியினர்: அவர் தகுதியற்ற அதிகாரி!

திரு டட்லி சேனநாயக்கா மேலும் கூறியதாவது:-

சதித்திட்டத்தில் யு. என். பி. யும் சம்பந்தப்பட்டுள்ளதாகச் சோடித்துவிடக் கூடியதையும் எவரும் சொல்லாமலிருந்தாலும் அதை தகுதிவாய்ந்த அதிகாரி சேர்த்துவிடுவார்.

சதித்திட்டத்துக்குக் கத்தோலிக்கர்மீது பழியைப் போடவும் காரியங்கள் செய்யப்பட்டன. ஒருவர் பின் ஒருவராக பௌத்தர்களல்லாதவரே கைது செய்யப்பட்டனர். இதுபோன்ற ஒரு சதி பௌத்தர்களில்லாமல் செய்யக்கூடுமென்பதையிட்டு நான் ஆச்சரியப்பட்டேன். ஆயுதப்படைகளிலும் அரசாங்க சேவையிலும் பொலிஸ் சேவையிலும் நாட்டிலும் கூட பௌத்தர்கள் பெரும்பான்மையினராகவுள்ளனர்

சதித்திட்டத்தில் சிறுபான்மையினரும் யு. என். பி யும் சம்பந்தப்பட்டிருப்பதாகக் காட்டுவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன.

நேர்மையான விசாரணைக்குப் பதிலாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விசாரணையை அரசாங்கத்தின் அரசியல் போக்குக்கும் இலட்சியத்துக்கு மேற்ப திரிக்க எத்தனிக்கப்பட்டுள்ளது.

சதித்திட்டம் சம்பந்தமாக ஆலோசனை செய்வதற்கு எதிர்க்கட்சித் தலைவர்களை முதலில் சபாநாயகர் அழைத்தார். சபைக் கூட்டத்தை முன்னதாகவே கூட்டவேண்டுமென்று பெரும்பான்மையான எதிர்க்கட்சியினருடன் யு. என். பி. கோரியது. பெப்ரவரி 6-ந் திகதி சபை கூட வேண்டுமென்று கோரினோம் சபையில் இன்று வெளியிடப்பட்ட அறிக்கையை "தயாரித்து" இவ்வளவும்தான் அரசாங்கத்தால் சமர்ப்பிக்கக் கூடியதாகவிருந்தது.

நானும் சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாக யாரோ ஒருவர் ஒரு பொலிஸ் அதிகாரிக்குக் கூறியதாக இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

சாட்சியங்களை தொடர்ந்து தயாரியுங்கள்.

கம்யூனிஸ்ட் கட்சி ஒரு துண்டுப பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறது. அதிலும் சில விஷயங்கள் கூறப்பட்டுள்ளன.

திரு. கெனமன் சதிபற்றி யு என் பி ஒன்றும் கூறவில்லையென்றுதான் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு டட்லி: சதித்திட்டம் பற்றி யு என் பி சில விஷயங்களைக் கூறியது. அவை சபையில் மீண்டும் பின்னர் தெரிவிக்கப்பட வேண்டியுள்ளது.

## கத்தோலிக்கரும் யு. என். பி. யும்

திரு டட்லி மேலும் குறிப்பிட்டதாவது:-

நேர்மையற்ற முறையிலும் நீதியற்ற முறையிலும் முதலில் கத்தோலிக்கர்மீதும் பின்னர் யு. என். பி. மீதும் பழியைச் சுமத்தியுள்ளது இந்த மாதிரியான ஒரு சூழலில்தான் விசாரணைகள் நடைபெற்றுள்ளன.

நிதிமந்திரி சதித்திட்டம் பற்றிய விசாரணைகளை நடத்துவதை அரசியல் கட்சித் தலைவர்கள் சபாநாயகரைச் சந்தித்தபொழுது ஆட்சேபனை தெரிவித்தோம். பொலிசார்தான் விசாரணைகளை நடத்துகிறார்கள். நிதிமந்திரி அங்கு சமுகமளித்துவருகிறார் என்று சபை முதல்வர் அப்பொழுது தெரிவித்தார்..

திரு ஜே ஆர்: அவர் (நிதி மந்திரி) பொலிசில் சேர்ந்துவிட்டாரா?

திரு டட்லி மேலும் பேசுகையில் விசாரணையை நிதிமந்திரிதான் நடத்துகிறாரென்றும் மற்றும் சில மந்திரிகள் சில சமயங்களில் கலந்து கொள்கிறார்களென்றும் விசாரணைக்குள்ளான இரண்டு அதிகாரிகள் தம்மிடம் கூறியதாகச் சொன்னார்.

அரசியல் கட்சி அங்கத்தவர்களுக்கெதிராக நிதிமந்திரி விசாரணை நடத்துகிறார் என்று திரு டட்லி கூறினார்.

### ஒரு எதிர்க்கட்சி அங்கத்தவர்

'அரசியல் முறைகேடு!'

விசாரணை செய்யவேண்டிய கடைசி ஆள் நிதிமந்திரியாக இருக்கவேண்டுமென்று திரு டட்லி கூறினர்

வீட்மைப்பு மந்திரி (மகாநாம சமரவீர)

விசாரணையை நடத்தியவர் நிதிமந்திரியல்ல. பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசிதான் எனவே நிதிமந்திரி விசாரணைகளை நடத்தவில்லையென்று சபை முதல்வர் கட்சித் தலைவர்களுக்குத் தெரிவித்தது சரியானதே!

(சபையில் சிரிப்பு)

திரு டட்லி மேலும் கூறியதாவது:-

ஒரு அரசியல் தலைவர் இந்த விசாரணையை நடத்துவது அதிருப்தியான செய்கை சதித்திட்டம் சம்பந்தமாக விசாரணை நடத்துபவர் எவரும் நகரமண்டபத்தில் ஒரு வைபவத்தின் போது நிதிமந்திரி பேசுகையில் "ஓரளவு எதேச்சாதிகாரம்" என்று குறிப்பிட்டது பற்றி விசாரணை செய்திருக்கவேண்டும்.

"டெயிலிநியூஸ்" பத்திரிகையில் முன்னாள் சிவில் சேவை அதிகாரி திரு. வி. ஈ. ஐயசூரியா எழுதிய கடிதம் பற்றியும் திரு. டட்லி குறிப்பிட்டார்.

எதேச்சாதிகார ஆட்சிதான் நாட்டுக்கு உகந்தது என்று அத்தக் கடிதத்தில் கூறப்பட்டிருந்ததாக திரு. டட்லி குறிப்பிட்டார்.

"கீழ்த்தரமான, சின்னத்தனமான முறையில் நிதிமந்திரி என்னைத் தொடர்பு படுத்தியுள்ளார்" என்று திரு. டட்லி கூறினர்.

நிதிமந்திரி: இந்த அறிக்கை என்னுடையதல்ல. மந்திரிசபையின் அறிக்கை. இது வஞ்சகமானதல்ல, சின்னத்தனமானதுமல்ல!

திரு. டட்லி: எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலரைக் கைது செய்யும்படி உத்தரவிடப்பட்டிருந்தது உண்மையா?

திரு பீலிக்ஸ்: நான் அதை மறுக்கிறேன். அது உண்மையல்ல!

திரு. டட்லி: மறுப்பை ஏற்றுக்கொள்கிறேன், பின்னர் அதுபற்றிக் கவனிப்போம்.

### காளுதூதுவர் காரியாலயத்தில்

திரு. டட்லி மேலும் குறிப்பிட்டதாவது:-

. கானாவில் டாக்டர் நிக்ருமா தயாரித்தது போன்ற ஒரு வெள்ளை அறிக்கை தயாரிக்கப்பட விருப்பதாகவும் அதன் பின் எதிர்க்கட்சித் தலைவர்கள் கைதுசெய்யப்படவிருக்கிறார்களென்று அகலவத்தை எம். பி. (திரு. அனில்முனசிங்கா) எனக்குத் தெரிவித்தார்.

ஆதார பூர்வமான இடத்திலிருந்து தமக்குத் தகவல் கிடைத்ததாக அகலவத்தை எம். பி என்னிடம் கூறினார்.

டாக்டர். என். எம். அது உண்மைதான்.

திரு. பீலிக்ஸ்: யார் அவர்?

டாக்டர்என். எம்.: தகவல் இலாகா அதிகாரியொருவர் காளுதூதராலயத்துக்குச் சென்று டாக்டர் நிக்ருமாவின் வெள்ளையறிக்கையின் ஒருபிரதிவேண்டுமென்று கேட்டிருக்கிறார்.

திரு. பீலிக்ஸ: யார்? அவர் பெயரைச்சொல்லுங்கள்?

டாக்டர் என். எம்: உங்கள் இலாகாவிலுள்ளவரைக் கண்டு பிடிக்கவேண்டியது உங்கள் கடமை

திரு பீலிக்ஸ்: பெயரைச் சொல்லுங்கள்.

திரு டட்லி: அவரிடமிருந்து அறியக்கூடிய கடைசி மனிதர் நீங்கள் தான்.

திருபீலிக்ஸ்: உங்கள்பெயரை சதித்திட்டத் தலைவர்களில் ஒருவரும் மற்றுமிருவரும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சிக்குரல்கள்: அவர்களின் பெயர்களைச் சொல்லுங்கள்.

திரு பீலிக்ஸ்: ஒரு தலைவர் உங்கள் பெயரை உபயோகித்திருக்கிறார். அது வீணாகவும் இருக்கலாம். உங்கள் பெயரைக் குறிப்பிட்ட மற்ற இருவரும் பொலிஸ் அதிகாரிகளான திரு வி வி திஸ்ஸநாயக்காவும் திரு சிட்னி டி' சொய்சாவுமாவர்.

திரு டட்லி: யாருடைய உத்தரவின் மீது பத்தேகம எம். பி. கைது செய்யப்பட்டார்?

அரசாங்க எம். பி. க்கள்: சதித்திட்டத் தலைவர்களைக் கேளுங்கள்.

திரு டட்லி: சதித்திட்டத் தலைவர்களைத்தான் நான் கேட்கிறேன்.

திரு டட்லி மேலும் பேசகையில் பிற்பகல் 3 மணியிலிருந்து சதித் தலைவர்கள் கைது செய்யப்பட்ட நேரம் வரைக்கும் எட்டரை மணி நேரம் வீணாக்கப்பட்டுள்ள தென்றும் இது சிந்தனைக்கு இடமளிக்கிறது என்றும் ஒரு சதிநடவடிக்கையா அல்லது ஒன்றுக்கும் மேற்பட்டதாவென்று ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ள தென்றும் கூறினர்.

### காப்டனின் தற்கொலை

காப்டன் போலியரின் தற்கொலை பற்றிக் குறிப்பிட்ட திரு டட்லி "சதிகாரர்களில் ஒருவர் என்று ஒப்புக்கொண்டவருக்கு லீவு வழங்கப்பட்டிருந்தது" என்று கூறினர்.

திரு. பீலிக்ஸ்: பிராசிக்கியூஷன் சாட்சிகள் எல்லோரையும் கைது செய்தால் விசாரணையே இருக்காதே!

திரு. டட்லி: சதிகாரர் ஒருவர் சாட்சியல்லவே! அவர் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு சதிகாரர்! மன்னிப்புக் கோரியதும் அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். மற்றும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திரு டட்லி மேலும் கூறியதாவது:-

இதை அரசியலாக்குவதன் மூலம் விசாரணையை அரசாங்கம் நாசமாக்குகிறது.

நேற்று கத்தோலிக்கர்கள். இன்று கத்தோலிக்கரும் யு. என். பி.யும் நாளை எனது இடது பக்கத்திலிருக்கும்(டாக்டர் என் எம். பெரேரா) அங்கத்தவர்கள். அதற்கு மறுநாள் முன் ஆசனத்திலுள்ளவர்கள் பலராக இருக்கலாம்.

இந்த போக்குபற்றி சபை அங்கத்தவர்கள் எச்சரிக்கையுடனிருக்கவேண்டும்.

சதியில் எனது பெயரும் இருக்கப்பட்டதற்காக வருந்துகிறேன்.

உங்களுக்கு அரசியல் பெரும்பான்மைப் பலம் இருக்கிறது அரசியல் பகைவர்களை ஒழித்துக்கட்ட விரும்பினால் நாளைக்கே 'டட்லி சேனநாயக்கா தூக்கிலிடப்படவேண்டும்' என்று ஒரு மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது உங்களுக்குக் கஷ்டமல்ல.

அரசாங்க எம். பி.க்கள்: நாங்கள அப்படிச் செய்யமாட்டோம்.

திரு டட்லி: அப்படிச் செய்தால் நான் ஒரு கோழையல்லவென்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்

---

புதுடில்லி, பெப். 13

இந்திய-ருமேனிய வர்த்தக ஒப்பந்தம் இவ்வருடம் இறுதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

# "சதித்திட்டத்துக்கு 27ந் திகதியை தெரிந்தெடுப்பானேன்?"

## பார்லிமெண்டில் டாக்டர் பெரேரா

கொழும்பு, புதன்

"இலங்கையின் வரலாற்றில் இது மிகுந்த துக்ககரமான ஒரு தினமாகும். காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா படுகொலை செய்யப்பட்ட தினத்தையே துக்க தினமாகப் பலர் கருதினர். இராணுவத்துக்கு அதிகாரம் கொடுப்பதையிட்டு எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென இடதுசாரிக் கட்சியினர் முன்னரே கூறியிருந்தனர். இன்று அரசாங்கம் சதிக்கு ஆளாகாமல் மயிரிழையில் தப்பிவிட்டது" எனடாக்டர்என் எம். பெரேரா பார்லிமெண்டில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:- ஜனநாயக ஆட்சியை முறியடிப்பதற்கு ஒரு சூழ்நிலை சிருஷ்டிக்கப்பட்டது. அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்களில் சிலரும் எங்களிற்சிலரும் இதற்குப் பலியாகி இருந்திருப்போம். எமது உயிர்போவதையிட்டுக் கவலையில்லை ஆனால் ஜனநாயக ஆட்சி முறையே சுக்குநூறாகிப்போயிருக்கும்.

இப்படியான ஒரு சதித்திட்டம் உருவாக்கப்பட்டதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இது கோழைத்தனமான ஒரு செயலாகும். இப்படியான ஒரு சதித்திட்டம் இனிமேலும் நடவாதிருப்பதற்காக நான் அரசாங்கத்துடன் என்றுமே ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றேன்.

இராணுவத்தின் ஒரு பகுதியினருக்கும் அரசாங்கத்துக்குமிடையில் ஏற்பட்ட ஒரு சண்டையாக அரசாங்கம் இதனைக் கருதக் கூடாது. இது தனிப்பட்ட ஒரு கட்சியை மாத்திரம் பாதிக்கவில்லை. சகல கட்சியினரும் ஒன்று சேர்ந்து இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்.

அவசரகாலநிலை இருக்குமானல் சதித்திட்டம் உருவாகுமென அப்போது கூறினோம். இராணுவத்தினரின் செயல்களை சென்ற நவம்பரில் நிதிமந்திரி பெரிதும் பாராட்டியிருந்தார். கேணல் உடுகம அரசாங்க வருமானத்தை விருத்திசெய்திருக்கின்றார் என்றும் அவர் புகழ்ந்தார்.

திரு. பண்டாரநாயக்கா: கேணல் உடுகம சதித்திட்டத்தில் ஈடுபடவில்லை என்பதைக் கூற விரும்புகின்றேன்.

டாக்டர் என்.எம். பெரேரா: இராணுவ அதிகாரி ஒருவருக்கும் கேணல் உடுகமவுக்கும் இடையில் கருத்துவேற்றுமை இருப்பதாகஅறிந்தேன். யாழ்ப்பாணத்தில் தாம் வெற்றிக்கொடி நாட்டிவிட்டதாகக் கேணல் உடுகம கருதக்கூடும். அவ்வாறே வேறு சிலர் தாம் கொழும்பிலும் நிர்வாகத்தை வெற்றிகரமாக நடத்தலாமென எண்ணியிருந்திருக்கக் கூடும்.

அரசாங்க உத்தியோகத்தர்களைப்போலவே தாமும் நிர்வாகத்தை நன்கு நடத்தலாமென எண்ணிய இராணுவ அதிகாரிகளைக் குறைகூற முடியாது. அவர்களின் எண்ணங்கள் உருவாகக்கூடிய ஒரு சூழ்நிலையை அரசாங்கம் சிருஷ்டித்திருக்கக்கூடாது.

கலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திலேயே இப்படி ஏதோ சந்தடி நடப்பதாக எதிர்க்கட்சியினர் எச்சரிக்கை செய்திருந்தனர். அரசாங்கம் அப்போது எமது பேச்சைப் பொருட்படுத்தவில்லை. எதேச்சதிகாரம் என்பதையே ஒரு மந்திரி சாதாரண விஷயமாக அப்போது கருதினர்.

நிதிமந்திரியின் விபரமான அறிக்கையிலிருந்து அரசாங்கத்தை ஜனவரி மாதம் 27-ம் திகதி கவிழ்க்கத் திட்டமிடப்பட்டதெனத் தெரிகிறது. எதற்காக 27-ந் திகதி தேர்ந்தெடுக்கப்பட்டதென்பதை ஆராய்ந்தறிவது மிக நன்றாகவிருக்கும்.

---

## சுற்றறிக்கைபற்றி ஆராய மறுப்பு

கொழும்பு, புதன்

இ. போ. ச. வின் ஒழுக்க நெறிக் கோட்பாடுகள் பற்றிக் கூறும் 41 வது இலக்க சுற்றறிக்கையை இ. போ. ச. இணைப்பு சபைக்கூட்டமொன்றில் ஆராய்வதற்கு இ.போ.ச. வின் நான்கு தொழிற்சங்கங்கள் மறுத்துள்ளன.

கீழ்வரும் காரணங்களுக்காகவே தொழிற்சங்கங்கள் சுற்றறிக்கையை ஆராய்வதற்கு மறுத்தன என்று, மோட்டார் தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு. டி. ஜி. வில்லியம் கூறியுள்ளார்.

1. இ. போ. ச. தொழிலாளர் மனேஜரால் வழங்கப்பட்ட 41-வது இலக்க சுற்றறிக்கை இ. போ. ச. வின் முன்னைநாள் அங்கத்தவர்களின் அங்கீகாரத்தைப் பெறவில்லை.

2. வெளியிடப்படு முன்னர் இச்சுற்றறிக்கை குறிக்கப்பட்ட நான்கு தொழிற்சங்கங்களுடன் கலந் தாலோசிக்கப்படவில்லை.

இணைப்பு சபையின் ஒழுங்கு முறை உபகமிட்டியின் முன்னிலையில் சுற்றறிக்கையை ஆராய்வதற்கு நான்கு தொழிற்சங்கங்களும் சம்மதம் தெரிவித்துள்ளன

---

## ஆவரங்கால் ஒழுங்கை திருத்தத்திற்கு ரூ. 6000 நன்கொடை

யாழ்ப்பாணம், புதன்

புத்தூர் கிராமசபையின் 4-ம் வட்டாரத்திலுள்ள விரவந்தனை வண்ணன்புல ஒழுங்கைத்திருத்தத்திற்கு அரசாங்கம் ஆறுயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

# அஷ்ட கிரகங்கள் பற்றி மீண்டும் பிரதமர் நேரு

போபால், பெப். 14

"மக்கள் அச்சமின்றி வாழவேண்டும். வீண் பீதி கூடாது" என்று பிரதமர் நேரு இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

சமீபத்தில் அஷ்டகிரக சேர்க்கைபற்றி மக்கள் அனாவசியமாகப் பெரும் திகிலடைந்தனர் என்று பிரதமர் கூறினர்.

அஷ்டகிரக நிவாரணத்துக்காக பெருந்தொகையான உணவுப்பொருள்கள் தீயில் எரிக்கப்பட்டதற்கு நேரு வருத்தம் தெரிவித்தார். "பூஜை, பஜனை, பிரார்த்தனைகளை நான் எதிர்க்கவில்லை. ஆனால் சமீபத்தில் நமது மக்கள் செய்த சில காரியங்கள் நமது கலாசாரத்திலுள்ள நல்ல காரியங்களுக்குக்கூட கெட்டபெயரை ஏற்படுத்திவிட்டது. மற்றவர்கள் நம்மைப் பார்த்துச் சிரிக்கக் கூடிய முறையில் நாம் நடந்து கொண்டுவிட்டோம்" என்று ஸ்ரீநேரு கூறினர்.

"அஷ்டகிரகங்கள் ஒன்று சேருகின்றன வென்று பலர் பீதியடைந்திருந்த சமயத்தில் கிரகங்கள் ஒன்றுகூடிய இடத்துக்குச் சமீபத்தில் நான் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். அந்தக் கிரகங்கள் என்னை ஒன்றும்செய்யவில்லை என்று பிரதமர் நேரு கூறினர்.

## ஸ்கட்டணம் தரப்படுத்தப்படலாம்

கொழும்பு, செவ்வாய்

பஸ் கட்டண விகிதங்களைத் தரபபடுத்துவது பற்றி இ. போ. ச. வின் கட்டணசபை சென்ற ஆண்டு சமர்ப்பித்துள்ள அறிக்கையை வெளியிடுவதுபற்றி கட்டண சபை நேற்றைய தினம் கூடிய கூட்டமொன்றில் தீர்மானம் செய்தது.

தொழில் தேசிய சேவை அமைச்சர் ஆட்சேபனை தெரிவிக்காது விட்டால் தரப்படுத்தப்பட்ட புதிய கட்டண திட்டம் மார்ச் மாதம் 1-ம் திகதி தொடக்கமாக அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

கட்டண சபையின் புதிய திட்டம் பிரசுரிக்கப்பட்டாலும் தற்போது அமுலாகிவரும் கட்டண திட்டம் மாற்றப்படக் கூடாது எனத் தொழில் தேசிய சேவை அமைச்சர் கூறியுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 7 வது பகுதி (1ம் பிரிவு) யின் பிரகாரம் கட்டண சபையின் சிபார்சுகளைப் பொதுமக்கள் நலன் கருதி அமைச்சர் நிறுத்திவைத்துள்ளார்.

---

## ஆஸ்பத்திரியில் நூல்நிலையம்

இரத்தினபுரி, செவ்வாய்

இரத்தினபுரி ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளர்கள் வாசிப்பதற்காக இங்கு ஒரு நூல் நிலையத்தை ஆரம்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்ட கருத்தை இரத்தினபுரி ஆஸ்பத்திரி ஆலோசனைக் கமிட்டி அங்கீகரித்துள்ளது.

---

## பட்டினசபையின் புதிய தலைவருக்கு வரவேற்பு

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறையின் பட்டின சபையின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. பி. இம்மனுவலுக்கு சென்ற ஞாயிற்றுக்கிழமை 4-ம் வட்டார வாக்காளர் சார்பில் ஓர் வரவேற்பளிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை சனசமூக நிலையத்தில் இருந்து மேள வாத்திய சகிதம் திரு. இம்மனுவல் ஆனந்தா சனசமூக நிலைய மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

நிலைய மண்டபத்தில் திரு. இ. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற உபசரணைக் கூட்டத்தில் ஆசிரியர் திரு. இராசையா, திரு. நிச்வே, திரு. கனகரத்தினம் உட்படப் பலர் புதிய தலைவரைப் பாராட்டிப் பேசினர்.

திரு. இம்மனுவல் தமக்கு அளிக்கப்பட்ட உபசரணைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் பட்டின சங்கத்தின் முன்னேற்றத்திற்கு உழைப்பதற்கு அங்கத்தவர்களின் பூரண ஒத்துழைப்பு அவசியம் எனக் குறிப்பிட்டார்.

---

## அனுபவமுள்ள டைரக்டர்!

கொழும்பு, செவ்வாய்

இலங்கைப் போக்குவரத்து சபை டைக்டர்களில் ஒருவராவது தொழில் துறை சம்பந்தமானதொடர்புகளில் அனுபவம் உடையவராக இருக்க வேண்டும் என தொழில் தேசிய சேவை அமைச்சு கருதுகிறது.

தொழில் தொடர்புகளில் கை தேர்ந்த ஒருவருக்கு இ. போ. ச. டைரக்டர் பதவி அளிப்பது பற்றி அமைச்சு தீவிமாக ஆலோசனை செய்து வருகிறது.

இது விஷயமாக அரசாங்கத்தின் அங்கிகாரத்தைப் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன.

# பத்தாவதுதிருக்குறள்மாநாடு
## மே மாதம் வேலணையில் நடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழ்மறைக் கழகத்தின் பத்தாவது திருக்குறள் மகாநாடு வேலணையில் வாலிபர் முன்னேற்றச் சங்க ஆதரவில் நடைபெறவிருக்கிறது.

இம் மாநாடு வருகிற மே மாதம் 18-ம், 19-ம், 20-ம் திகதிகளில் நடைபெறும். இம் மாநாட்டில் தமிழ் நாட்டுப் பேரறிஞர்களும் ஈழநாட்டுப் பேரறிஞர்களும் சொற்பொழிவாற்றுவார்கள் எனவும் இசை விருந்தும், நாடகமும், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

சென்ற ஆண்டில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வில் பரிசில்களும் சான்றிதழ்களும் பெற்றவர்களுக்கு இம் மாநாட்டில் வழங்கப்படும்

இம் மாநாட்டை முன்னிட்டு வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கம் திருக்குறள் சம்பந்தமான கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, மனனப் போட்டி ஆகியவற்றையும் நடத்த முடிவு செய்துள்ளது. இப் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்குப் பல பரிசில்கள் இம் மாநாட்டில் வழங்கப்படும். போட்டிகளின் விபரங்கள் விரைவில் வெளியிடப்படும்.

---

## 75 வீதமான ஆசிரியர் எம். பி.க்கள் உதவியை நாடுகிறார்களாம்

கலகெதரா, புதன்

"அரசியல் எம். பி.க்களின் உதவியை நாடுபவர்களில் நூற்றுக்கு 75 வீதம் பேர் ஆசிரியர்களே. தமது கடமைகளைக் கவனமாகச் செய்து வரும் ஆசிரியர்கள் அரசியல் வாதிகளைச் சந்திக்கவேண்டியது அவசியமில்லை"

இவ்வாறு திரு. கே. அப்துல் ஜபார் கலகெதரா அரசாங்க மகளிர் பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் பேசுகையில்கூறினர். எச். சந்தானந்தா தேரோவின் தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

"ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருக்கவேண்டும் என எதிர் பார்த்தபோதும், அவர்களுக்கிடையே தொடர்புகள் அருகிவருவதைக் காணமுடிகிறது" எனத்தலைவர் உரையின் போது எச். சந்தானந்தா தேரோ கூறினர். பிள்ளைகளின் மீது போதிய அக்கறை எடுக்கும் பெற்றோர்கள் பாடசாலையுடன் ஒத்துழைக்கவேண்டும்என வும் அவர்கூறினர்.

---

## விவசாயப்பயிற்சிக்குத் தெரிவு

முள்ளியவளை, புதன்

முல்லைத்தீவு, வவனியா, மன்னார்ப் பகுதிகளிலுள்ள சுமார் 180 விண்ணப்பதாரரை, வவனியா மாவட்ட விவசாய விஸ்தரிப்பு காரியாலயத்தில், மூவரடங்கிய குழு, நேர்முகமாகப் பரீட்சித்து 32 பேரைத்தேர்ந்தெடுத்து விவசாய டைரக்டரின் அங்கீகாரத்துக்காகச் சிபார்சு செய்துள்ளது.

வவனியா விவசாய பயிற்சிப் பாடசாலையில் ஓராண்டுப் பயிற்சி பெறவே, இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

---

## தந்த தரிசனம் ரத்து

கண்டி, செவ்.

பெப்ரவரி 21-ம் திகதி தொடக்கம் மார்ச் 1 ம் திகதி வரை கண்டி தலதா மாளிகாவிலுள்ள பௌத்த தந்தம் பொதுமக்கள் பார்வைக்கும் வணக்கத்துக்கும் வைக்கப்படவிருந்தது. நாட்டில் இன்று அம்மை நோய் பரவிவருவது காரணமாக இது ரத்துச் செய்யப்பட்டுள்ளது

## வவனியாவில் தொழில் வழிகாட்டி வகுப்புக்கள்

வவனியா, புதன்

வவனியா சிங்கள மகாவித்தியாலயத்தில் புளியங்குளம், முல்லைத்தீவு, வவனியா, முருங்கன், மன்னார் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளின் தலைமையாசிரியர்களுக்குச் சிரேஷ்ட உதவியாசிரியர்களுக்கும் தொழில் வழிகாட்டி வகுப்பொன்று நடத்தப்பட்டது. இதில் வவனியா மாவட்ட வித்தியாதரிசி திரு கரத் வித்தியாதரிசி திரு. எஸ். சபாபதி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

---

## உரப்பொருள் இறக்குமதி கார்ப்பரேஷன்

கொழும்பு, செவ்வாய்

விவசாயத்துக்குத் தேவைப்படும்உரப்பொருள்களை இறக்குமதிசெய்வதற்குவெகுவிரைவில் ஒரு புதிய கார்ப்பரேஷன் அமைக்கப்படவிருக்கிறது காணி விவசாய நீர்ப்பாசன அமைச்சின் கீழ் இந்தக் கார்ப்பரேஷன் தொழிற்பட்டுவரும்.

விவசாய சேவைக் கமிஷனரைத் தலைவராகக் கொண்ட நிர்வாகசபையொன்று கார்ப்பரேஷனுக்குத் தற்காலிகமாக அமைக்கப்படும். ரப்பர் கட்டுப்பாட்டதிகாரி, விவசாயப் பகுதி டைரக்டர் ஆகியோரும் வேறு சிலரும் கார்ப்பரேஷனின் தற்காலிக நிர்வாக சபையில் அங்கத்தவர்களாக விருப்பர்.

---

## திவ்விய ஜீவன சங்கக் கூட்டுப்பிரார்த்தனை

உடுப்பிட்டி, செவ்வாய்

கடந்தசனிக்கிழமை மாலை திவ்ய ஜீவன சங்கத்தின்கீழ் கரவெட்டி மேற்கு கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் யோகிராஜ்சுவாமி சச்சிதானந்தாவின் தலைமையில் ஒரு கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது.

இப்பிரார்த்தனையின்போது புத்தர், அல்லா, யேசு, அருக்கன் ஆகிய கடவுளரும் வழிபடப்பட்டனர். உலோகாயுதத்தால் சிக்கித்தவிக்கும் உலகத்திற்கு அமைதியையும்,சமாதானத்தையும் அளிக்கவேண்டுமென வேண்டப்பட்டது.

திரு. வி. எஸ். கதப்பு நன்றி கூறுகையில் மனிதன் மனிதப் பண்புகளை இழந்தமையாலேயேஇன்று உலக அரங்கில் சீர்கேடுகள் தலைகாட்டுகின்றன என்றும் அதற்கு மதநம்பிக்கையொன்றே மருந்தென்றும் கூறினர்.

---

## பயிர்கள் அழிவு
### விவசாயிகள் கவலை

முள்ளியவளை, புதன்

கோடாலிக்கல், தட்டாமலை, புதுக்குளம் தண்டுவான் பகுதிகளிலுள்ள வயல்களில் விளைந்த பயிர்களில் பல ஏக்கர் வாடி மடிந்துவிட்டன! காரணம் தெரியாது கமக்காரர் கலக்கமடைந்துள்ளனர்.

ஓரிடத்தில் இது ஆரம்பமாகி, வேறிடங்களுக்குப் பரவுவதாக சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் புதுவித நோயா அல்லது வேறேதும் குறைபாடா என்பது தெரியாது ஏக்கமடைந்துள்ளனர்.

விரைவிலே அறுவடையை முடிப்பதற்கும் இடையிடையே பெய்யும் மழை இடையூறாக உள்ளதெனச் சொல்லப்படுகிறது.


மாமைட் எனக்கும் என்

குடும்பத்தாருக்கும், நற்சுகமும்

பெலனும் தருகிறது



இவர்கள் யாவரும் நன்றாய்ச்சாப்பிடுகிறார்கள். அதிகசக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். பலத்திற்கும் வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வர வேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானல் கொஞ்சம் எலுமிச்சம்பழச் சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாக தடவி சாப்பிடலாம். மாமைட்டை சூப், கறி முதலியவற்றில் சேர்க்கும்பொழுது அதிகப்படியான ருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும் பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக்கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.




மாமைட்

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வியாழன், 15-2-62

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 சேர்ந்திசை, 7-30 திரைஇசை, 8 00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00சதம்ட இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைமுர் மன்றம், 5-45 திரைஇசை, 6-15 பாங்கு

இரவு 7-00 கனகசெந்தி நாதன் - பேச்சு. 7-15 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 930 குரல்வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 எஸ். நாகலட்சுமி - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 11-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 எஸ். நாகலட்சுமி - பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல்இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி(சர்க்கார் சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல், 7-35 ஏ. வி. ஆர். கிருஷ்ணஸ்வாமி ரெட்டியார்-பேச்சு. 7-45 ராகம், தானம், பல்லவி டி. என் மரியானந்தம்-பாட்டு, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 திரைப்பட இசை, 9-15 ரேடியோநாடக இசை, 9-30 அகில பாரத நாடக நிகழ்ச்சி. டிரினிடாட் கிரிக்கெட்

## பள்ளியில் தேசியசேவை

பளை, புதன்

பளை அரசினர் மகாவித்தியாலய மாணவர்கள் பிரதி சனிக்கிழமைகளில் ஒவ்வோர் வகுப்பினராக தேசிய சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலையின் உள்ளும் புறமும் உள்ள வெளி வேலைகளை தாமே செய்து முடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

## அம்மைப்பால்கட்டப்பட்டது

சுழிபுரம், புதன்

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை அம்மை நோயைத் தடுக்கும் பொருட்டு அம்மைப்பால் கட்டப்பட்டது.

## யாழ் விநோத கைத்தொழில் விவசாய பொருட்காட்சி

### அடுத்த மாதம் 9ம் திகதி நடாத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலைய நிதிக்காக அடுத்த மாதம் 9-ம் திகதி யாழ் விநோத கைத்தொழில் விவசாயப் பொருட்காட்சியொன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

குடிசைக் கைத்தொழில், விவசாயம் சம்பந்தமான போட்டிகளும் நடாத்தவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. வடபகுதியிலுள்ளஒவ்வொருகாரியாதிகாரி பிரிவிலிருந்தும் இப் போட்டிகளில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுமெனத் தெரிகிறது.

இப் பொருட்காட்சியில் சிறந்த காட்சிச்சாலை, சிறந்த காய்கறிவகை, சிறந்த கோழிகள், சிறந்த கால்நடைகள் ஆகியவற்றிற்கு பரிசில்கள் வழங்கவும் ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிகிறது.

## பட்டினசபைக் கூட்டம்

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. பி. இம்மனுவல் தலைமையில் சென்ற சனிக்கிழமை நடைபெற்றது.

புதிய பட்டினசபையின் முதலாவது கூட்டமாகிய இக்கூட்டத்திற்கு எல்லா அங்கத்தவர்களும் சமுகம் கொடுத்திருந்தனர். வரி இறுப்பாளர் பலர் கலரியில் அமர்ந்து இருந்து சபையின் நடவடிக்கைகளைக் கவனித்தனர்.

சபையின் நிர்வாகத்தைதமிழ் மொழியில் நடத்த வேண்டும். என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை 'வாடிவீடு' மிகவும் பழுதடைந்து இருப்பதால் அதை உடனடியாகத் திருத்தம் செய்ய வேண்டும் என அரசினரைக் கேட்டுக் கொள்ளும் மற்றோர் தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## எவருக்கும் வெற்றியில்லை

போர்ட்ஒப்ஸ்பெயின் பெப். 14

இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கும் டிரினிடாட் கோஷ்டிக்குமிடையில் இங்கு நடைபெற்ற ஆட்டம் எவருக்கும் வெற்றியின்றி முடிவடைந்தது.

இந்தியக் கோஷ்டி தனது முதல் இன்னிங்சில் 366 ரன்களையும் இரண்டவது இன்னிங்கில் 5 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 163 ரன்களையும் எடுத்திருந்தது. டிரினிடாட் கோஷ்டி தனது முதல் இன்னிங்சில் 246 ரன்களையும் இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 147 ரன்களையும் எடுத்தது.

## 30 பேருக்கு காணி பங்கீடு

வவுனியா, செவ்

வவுனியாக் கச்சேரியில் கல்வெளிக்குளம், கிடாய்ச்சூரி, பம்மடு, கருஞ்சாலிக்குளம், தாண்டிக்குளம், தம்பனை ஆகிய இடங்களில் காணி கொடுப்பதற்கு நேர்முகப் பரீட்சை வவுனியாக் கசசேரியில் நடைபெற்றது. 700 பேர் பரீட்சைக்குச் சமூகமளித்தனர். இவர்களில் 350 பேருக்கு மட்டும் பயிர்செய்கைக் காணி, நாலு வாரிக்காணி, மேட்டு நிலம் கொடுபடும்.

## உரும்பராய் இ. வி. கழகம்

### புதுவருட உத்தியோகத்தர் தெரிவு

உரும்பராய், செவ்வாய்

உரும்பராய் இளைஞர் விவசாயக கழகத்தின் வருடாந்தக் கூட்டம் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் சென்ற சனிக்கிழமை நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்கள் தேர்தலின்போது தலைவராக திரு. சி. கதிரவேலுவும், உபதலைவராக திரு. மா. ஜெகதீஸ்வரனும், காரியதரிசியாக திரு.ச. ஏகாம்பரநாதனும், உபகாரியதரிசியாக திரு.ச. கந்தசாமியும், தனதிகாரியாக திரு. அ. அமிர்தலிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர். மற்றும் செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## பாராட்டு மலர் வெளியிட முடிவு

யாழ்ப்பாணம், செவ்

பண்டிதமணி வித்துவான் ந. சுப்பையாபிள்ளை பாராட்டு விழாச்சபையின் கூட்டமொன்று சென்ற சனிக்கிழமை வண்ணை நாவலர் வித்தியாசாலையில் கூடியபொழுது வித்துவான் ஞாபகமலர் வெளியிடுவதற்கும் நிதிசேர்ப்பதற்குமுரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதெனமுடிவு செய்யப்பட்டது.

ஆசிரியருக்குக் கடிதம்

## பத்திரகாளி அம்மன் கோவிலும் மிருக பலியும்

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் மிருகபலி தொடர்ந்து நடைபெறும் என்றும், மிருகபலி நடைபெறுமெனக் கூறப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், ஆடு-கோழிகளை வெட்டி அம்பாளின் அனுக்கிரகத்தைப் பெற்றுக்கொள்ளும்படியும் 3-2-62ல் சுழிபுரம் திரு. சி.ஆசைப்பிள்ளை வெளியிட்ட செய்திக்கு கோவிலின் உரித்தாளர்களும் நிர்வாகஸ்தர்களுமாகிய நாங்கள் மறுப்புத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மிருக பலியைத் தவிர்ந்த ஏனைய வழிபாட்டுடன் அம்பாளின் அனுக்கிரகத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பக்தர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

க. பொன்னையா,
சி. கனகசபை,
இ. சுந்தரம்.
உடுவில்.

## மகாசபை வாலிபர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை வாலிபர் சங்க நிர்வாகக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது, மகாசபையின் எதிர்வரும் மாநாட்டிற்கான பிரசார வேலைகளில் ஈடுபடுவதெனவும், கிராமங்கள்தோறும் இதில் ஈடுபடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இம்மாதம் 18-ம் திகதி பொதுக்கூட்டத்தைக் கூட்டுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்கம்

### யாழ்ப்பாணக் கிளை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ்ப்பாணம் கனகபவனத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. வி. ஏ. கந்தசாமி தலைமை வகித்தார்.

திரு. கந்தசாமி தமது தலைமையுரையில் கூறியதாவது:-

முற்போக்கு அரசாங்கம் ஒன்றை அமைக்க உதவியவர்கள் தொழிலாளர்கள். தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் பிணக்கு ஏற்படும் போதெல்லாம் பிற்போக்குச் சக்திகள் அதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தமுனைகின்றன. இதை முறியடிக்க முன்வரவேண்டும்.

ஆசிரியர் திரு. எம். கார்த்திகேயன் பேசுகையில் கூறியதாவது:-

பீடி இறக்குமதிக் கட்டுப்பாட்டால், உள்ளூர் உற்பத்தி பெருகிகிறது. இந்த நிலையில் தொழிலாளர்கள் கணிசமான சம்பளம் பெறுவதற்கு இத்தகைய சங்கங்கள் முயற்சி எடுக்கவேண்டும்."

கூட்டத்தில இன்னும் பலரும் பேசினர்.

## பாடசாலையில் படக்காட்சி


யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கை பகிரங்க சுகாதாரப்பகுதியினரால் வண்ணை நாவலர் பாடசாலையில் சுகாதார சினிமாப் படக்காட்சி இன்று காண்பிக்கப்பட்டது.

மலேரியா, பாண்டுநோய், ஈக்களினால் உண்டாகும் நோய்களை வரவிடாமல் பாதுகாக்கும் விஷயங்கள்பற்றி அப்படக்காட்சி விளக்கியது.


தூட்டைத் தணிக்கக்கூடியதும் கறல் பிடிக்காததுமான

# அலுமினியம் கூரைத் தகடுகள்



வளைத்து நெளிக்கப்பட்டுள்ள அலுமினிய கூரைத் தகடுகள் இலங்கையில் எல்லா இடங்களிலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

நீண்ட கால உபயோகிப்புக்கு உரிய அலுமினியத் தகடுகள் மலிவானவை. இலேசானவை. குறைந்த போக்கு வரத்துச் செலவுடன் எடுத்துச் செல்லக் கூடியவை. இலகுவாகப் பொறிக்கக் கூடியவை.

சிக்கனமான உபயோகத்துக்கும், நீண்ட கால உழைப்புக்கும், கடைகள் தொழிற்சாலைகள் வீடுகளின் கூரைத் தேவைக்கும் அலுமினிய கூரைத் தகடுகளே சிறந்தவை.

விபரங்களுக்கு:

கூ. மொ. வி.
கடினப்பொருள் இலாகா
11, ரோஸ்மீட் பிளேஸ்,
கொழும்பு-10

கூ. மொ. வி.
கடினப்பொருள் கடை
நாஷனல் ஹவுஸிங் ப்ளாட்ஸ்,
ஆமர் வீதி, கொழும்பு.

கூ. மொ. வி.
விநியோக ஸ்டோர்ஸ்
40, மக்கல்லம் வீதி,
கொழும்பு-11.

அலுமினியம் தகடுகளும் அலுமினியக் கூரைத் தகடுகளும்

கூ. மொ. வி. தாபனத்தின் சகல டிப்போக்களிலும் கிடைக்கும்.

CWE
FOR QUALITY AND VALUE

# தற்கொலை செய்வதாக பயமுறுத்திய அங்கத்தினர்

## நகரசபைக் கூட்டத்தில் நிகழ்ந்த சம்பவம்

பாணந்துறை, புதன்

பாணந்துறை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் கடந்த மாதக் கூட்டறிக்கை வாசிக்கப்பட்டு முடிந்ததும் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடைபெற்றது. நகரசபை அங்கத்தவர் ஒருவரான திரு. செலமன் பெர்னுண்டோ, அறிக்கை வாசிக்கப்பட்டு முடிந்ததும் தமது மூக்குக் கண்ணுடியைப் பலமாக நிலத்தில் வீசி ஆர்ப்பாட்டம் செய்தார்.

கூட்டறிச்கையில் தம்மைப் பற்றிக் கூறப்பட்ட ஒருசில வாசகங்கள் அங்கீகரிக்கப்பட்டால் தாம் தற்கொலை செய்துவிடுவதாகப் பயமுறுத்தினர். கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுமுன்னர் வாசகங்களில் ஒரு சில மாற்றங்களைச் செய்வதற்கு தலைவரும் உப தலைவரும் சம்மதம் தெரிவித்தார்கள். திரு. பெர்னுண்டோ சிறிது ஆறுதலடைந்து அமர்ந்தபோது கூட்டம் தொடர்ந்தும் நடைபெற்றது.

புதிய உப தலைவர் தெரிவு அடுத்த கூட்டத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

---

## கதிரை இல்லாததால் மாணவர்கள் தரையிலிருக்கிருர்கள்

திருகோணமலை, புதன்

சித்தூரிலுள்ள அரசாங்க கலவன் பாடசாலையில் போதிய கதிரைகள் இல்லாததால் பல மாணவர்கள் தரையிலிருக்க வேண்டியுள்ளது.

அரசாங்கத்தின் உதவியோடு இங்குள்ள கிராம சபையினுல் கட்டப்பட்ட இந்தப் பாடசாலை கடந்த சில மாதங்களாக தலைமை ஆசிரியர் இல்லாமலேயேநடைபெற்றுவருகிறது.

இப்பாடசாலையில் போதிக்கும் ஆசிரியர்களுக்கு இன்னும் சம்பளம் வழங்கப்படவில்லையெனத் தெரிகிறது.

## தியேட்டர் செய்திகள்

●

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த **பாச மலர்**

●

யாழ்ப்பாணம் மனேகரா கே. ஆர். ராமசாமி, பத்மினி நடித்த **காஞ்சனு**


5வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவ (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெப்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ண (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தீபொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)


பெண்மையின் நிறைவு!

தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!

பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!

இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும் உத்தமியின் காவியம்!

இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனேகரா (யாழ்ப்பாணம்)

கே. ஆர். ராமசாமி பத்மினி

நடித்த

காஞ்சனு


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# "செல்லத்துரை கையை உயர்த்தி வெட்டுவதைக் கண்டேன்"

## தனியூற்று கொலை வழக்கில் வர்த்தகர் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

வவுனியாவைச் சேர்ந்த தனியூற்றில் கடந்த 1960 ஜூன் 7-ம் தேதி மரியாம்பிள்ளை கந்தசாமி என்பவரை கோடரியால் வெட்டிக் கொலை செய்ததாக செல்லப்பா செல்லத்துரைமீது குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு, வடமாகாண அசைஸில் நீதிபதி டாக்டர் எச். டப்ளியூ. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

தனியூற்றில் வசிக்கும் வர்த்தகரான 23 வயதான சுப்பர் மகன் வல்லிபுரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"காலஞ்சென்ற கந்தசாமியை எனக்குத் தெரியும். சில வேளைகளில் அவர் எனது தேநீர்க்கடைக்கு வருவதுண்டு. இரவு 8-30 மணிக்கு காலஞ்சென்றவா எனது கடைக்கு வந்து உணவு கேட்டார். உணவு இல்லை என நான் கூறியதால் கடையின் உள்ளே அவர் வரவில்லை. அவர் நன்ருகக் குடித்திருந்ததால் உணவு இல்லை எனக் கூறினேன். நான் சடைவாசலிலிருந்து வெளியே இருந்த கந்தசாமியுடன் பேசிக்கொண்டிருந்தபோது, செல்லத்துரை என்பவர் வந்தார். அவர் கந்தசாமியைப் பிடித்து, 'வா' என்று இழுத்தார். கந்தசாமி கீழே விழுந்தார். வீதியில் கொஞ்ச தூரம் அவர்கள் இழுபறிப் பட்டுக்கொண்டிருந்தனர். காலஞ்சென்றவர் எதிரியின் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு மாங்குளத்தை நோக்கி சிறிது தூரம் நடந்த பின் வீதியில் கிடந்தார். ஏதோ அடி விழுந்ததுபோல் சத்தம்கேட்டது. நான் வெளியேவந்து பார்த்தபோது செல்லத்துரை கையை உயர்த்தி ஒரு கைக் கோடரியால் பல முறை வெட்டியதைக் கண்டேன். அப்போது இரவு 9-30 மணி இருக்கும். முல்லைத் தீவை நோக்கி எதிரி போவதையும் கண்டேன். பொலிசார் வந்து என் வாக்குமூலத்தைப் பதிவு செய்தனர்."

கடந்த இரண்டு செஷன்ஸ்களில் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தது. இரு முறையும் ஜூரர்கள் சபை கலைக்கப்பட்டு மீண்டும் விசாரணை நிர்ணயிக்கப்பட்டது. மூன்ருவது தடவையாக இப்போது வழக்கு நடந்துகொண்டிருக்கிறது

---

## மார்ட்டின் வீதி இரட்டைக் கொலை வழக்கு

### சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதி இரட்டைக் கொலை வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டனுல் சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

இவ் வழக்கில் எம். ஏ. துரைராசா எம் எஸ். மரியதாஸ் ஆகிய இருவரையும் கடந்த செப்டெம்பர் மாதம் 15-ம் திகதி கத்தியால் குத்தி கொலைசெய்ததாக சின்னத்துரை குணரத்தினம் என்னும் சிம்பிளிமீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

---

## வீதியோரங்களில் பலாமரம்

### நாட்டுவதென தீர்மானம்

கொழும்பு, புதன்

ரத்மலானை-மொரட்டுவைக்கு இடைப்பட்ட பகுதியில் காலி வீதி யோரமாகப் பலா மரம் நாட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெகு விரைவில் வளர்ந்து காய்க்கும் பலாமரங்கள் வீதியோரமாக நாட்டப்படும். காணி விவசாய நீர்ப்பாசன அமைச்சர் நியமித்த விசேஷ கமிட்டி இச்சிபார்சைச் செய்துள்ளது. விசேஷ கமிட்டியின் இந்த சிபார்சு அங்கீகாரம் பெற்றுள்ளது.

மாவட்ட அடிப்படையில் மகில சமித்திக்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்குமிடையே மரம் நாட்டும் போட்டிகளை ஏற்படுத்தவேண்டும் எனவும் கமிட்டி சிபார்சு செய்துள்ளது. கோப்பி மிளகு ஆகிய பயிர்கள் போட்டி முறையில் பயிரிடப்படவேண்டும் எனக் கமிட்டி கூறியுள்ளது.

தோட்டப்பகுதிகளிலுள்ள அபிவிருத்தி குறைந்த நிலப்பகுதிகளின்மீது காணி வரி வசூலிப்பதை 10 வருடங்களுக்கு ரத்துச் செய்யும்படி அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்வதெனவும் கமிட்டி தீர்மானித்துள்ளது.

---

## இலங்கையில் இன்றைய கல்விக் கொள்கை

கொழும்பு, புதன்

இலங்கையில் இன்று கடைப்பிடிக்கப்பட்டுவரும் கல்விக் கொள்கைபற்றி கல்வி நிபுணர்கள் பல அபிப்பிராயங்களையும் தெரிவித்துள்ளார்கள்.

"இன்றைய கல்விக் கொள்கையினுல் மாணவர் நாட்டுக்கு உபயோகமுள்ளவர்களாக வளர்வதோடு தேச அபிமானமுடையவர்களாகவும் மாறுவர்" என உதவிக் கல்வி மந்திரி திரு. வி. டி. ஜி. கருணரத்ன கொஹாகொட மகாவித்தியாலயத்தில் புதிய கட்டிடமொன்றின் நதிப்பு வைபவத்தின் போது பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

சகல மத, இன மக்களுக்குமிடையே சமத்துவத்தை ஏற்படுத்துவதே இதந் அரசாங்கத்தின் நோக்கமாகும். பௌத்த சங்கத்தை அரசாங்கம் கட்டுப்படுத்தவிருக்கிறது எனப் பௌத்த சங்கம் கொண்டுள்ள பீதி முற்றிலும் நீங்கவேண்டும்.

முன்னைய கல்விக் கொள்கை தான் இன்னும் கையாளப்பட்டுவருகிறது. தேசிய கல்விக் கொள்கை இன்னும் அமுல் செய்யப்படவில்லை.

---

## பொலிஸ் அதிபர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களைக் கைதுசெய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிடுவது சகஜமான ஒன்று என்பதை ஐ. ஜி. பி. அறிந்திருக்கிருர். இப்படித்தான் சூழ்நிலை இருந்துள்ளது. இல்லாவிட்டால் ஏன் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் இரவு 7 மணிவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்கிறேன். அவிசாவலை அங்கத்தினர் ஜனவரி 26ந் திகதி இவ் விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது பாதுகாப்பு அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி ஏதாவது நடவடிக்கை எடுத்தாரா? இல்லாவிட்டால் ஏன்? அவருக்கு இவ்விஷயம் பூரணமாகத் தெரிந்திருக்கவேண்டும்.

டாக்டர் என். எம். தொடர்ந்து கூறியதாவது:

"இரவு 10-30 வரை புரட்சித்திட்டம் கைவிடப்பட்டதா இல்லையா என்பது அரசாங்கத்துக்குத் தெரியாது. கின்ரோஸ் கடற்கரையில் அது கைவிடப்பட்டது. அதனுல் தான் எல்லா அதிகாரிகளையும் அவர்களது வீட்டில் கண்டனர். இல்லாவிட்டால் சதித்திட்டத்தை உருவாக்கியவர்கள் வீடுபோய்த் தூங்கியிருக்க மாட்டார்கள்.

இடதுசாரித் தலைவர்களைக் கைதுசெய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டது உண்மையானதாகும்.

அரசாங்கக் குரல்: "இல்லை."

டாக்டர் பெரேரா: "ஒரு பொது வேலை நிறுத்தத்தை எதிர்பார்த்து இடதுசாரித் தலைவர்களைக் கைது செய்யப் பொலிஸ் அதிகாரிகள் எதிர்பார்த்திருந்தனர். இடதுசாரித் தலைவர்களைக் கைது செய்து, வேலை நிறுத்த தலைவர்களுக்கெதிராகத் தங்கள் பலத்தைக் காட்டுவதுபற்றி சில காலமாக மந்திரிகள் சிலர் பேசிக்கொண்டு வந்ததை மறந்துவிடக்கூடாது. சில பொலிஸ், ராணுவ அதிகாரிகள் விசாரிக்கப்பட்டபோது "ஐயா உங்கள் உத்தரவுப்படியே நடந்தோம்" எனக் கூறியதை மறுக்குமாறு நிதிமந்திரியைக் கேட்கிறேன். விசாரணை செய்யப்பட்ட பெரும்பாலான அதிகாரிகள் உயர்தர அதிகாரிகளிடமிருந்து — பண்டாரநாயக்காவிடமிருந்து—கிடைத்த உத்தரவுகளை நிறைவேற்றுவதாகவே தாங்கள் நினைத்திருந்ததாகக் கூறியிருக்கிருர்கள்.

---

## தமிழ்நாடு தேர்தல் முடிவு

சென்னை, பெப். 14

தமிழ்நாடு தேர்தல் முடிவுகளையும், இதரதேர்தல் முடிவுகளையும் சென்னை, மதுரை, கோயமுத்தூர் ஆகிய இடங்களில் உடனுக்குடன் அறியும் பொருட்டு டெலிபோன் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 24 மணிநேரமும் குறிப்பிட்ட ஒருஇலக்கத்தைஅழைத்து முடிவுகளை அறியலாம்.

தமிழ்நாட்டுக்கு 4 கோடி வாக்குச் சீட்டுக்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன.

---

## போர்ச்சுக்கலில் புரட்சிப்படை தயார்

சாவ்பாலோ, பெப். 14

சலஸார் ஆட்களுடன் கணக்குத் தீர்க்கும் நாள வந்தே தீரும் என்று போர்ச்சுக்கீசிய எதிர்க்கட்சித் தலைவர் ஜெனரல் டல்காடோ இங்கு கூறினர் அவர் நாடுகடத்தப்பட்டு வெளி தேசத்தில் வசிக்கிருர்.

"சாண்டா மாரியா" கப்பல் நடுக்கடலில் கைப்பற்றப்பட்டது சம்பந்தமாக லிஸ்பன் ராணுவக் கோர்ட்டில் அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தகவல் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

சமீபத்தில் சலஸார் ஆட்சியை எதிர்த்து நடைபெற்ற பெஜா கலகத்தை தான் நடத்தியதாக அவர் கூறினர். போர்ச்சுக்கலில் 12 நாட்கள் தங்கிய போது, ஒரு புரட்சிப் படையைத் தயார்செய்ததாகவும், அது விரைவில் செயலில் இறங்குமென்றும் அவர் சொன்னர்.

சலஸாரின் நீதிபதிகளின் தீர்ப்பில் தனக்கு அக்கறை இல்லை என்ருர் அவர்.

---

## லைசென்ஸ் இன்றி 'பியர்' விற்ருராம்

சாவகச்சேரி, புதன்

கிளிநொச்சி சரஸ்வதி புத்தகசாலைச் சொந்தக்காரரான வல்லிபுரம் கணேசு என்பவர் லைசென்ஸ் எதுவுமின்றித் தமது புத்தகசாலையிலேயே 'பீயர்' குடிவகையை விற்பனை செய்தார் என அவர்மீது குற்றம்சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கு விசாரணை முடிவில் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ஏ வைத்திலிங்கம், எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ரூபாய் 300 அபராதம் விதித்தார்.